# தெய்வத் திருமகன்

(புதுக்கவிதை)



ரா.சீ

# தெய்வத் திருமகன்

(இராம காதை)

டாக்டர் ரா. சீனிவாசன்,

எம். ஏ., எம். லிட்., பிஎச். டி

அணியகம்

சென்னை-30

முதற் பதிப்பு 1996

| | |
|---|---|
| நூல் தலைப்பு | தெய்வத் திருமகன் (புதுக் கவிதை) |
| ஆசிரியர் | ரா. சீனிவாசன் |

விலை ரூ. 25

## பிற நூல்கள்

| | |
|---|---|
| பரிசுமழை (சிறு கதைத் தொகுப்பு) | ரூ. 25-00 |
| படித்தவள் | ரூ. 25-00 |
| குப்பைமேடு | ரூ. 25-00 |
| திருக்குறள் செய்திகள் | ரூ. 40-00 |
| மொழியியல் (மறு பதிப்பு) | ரூ. 50-00 |
| அணியும, மணியும் (,,) | ரூ. 30-00 |
| சொல்லின் செல்வன் (,,) | ரூ. 25-00 |
| திரௌபதி சூள்உரை (புதுக் கவிதை) | ரூ. 25-00 |
| கம்பராமயணம் | ரூ. 30-00 |
| மாபாரதம் | ரூ. 30-00 |
| சீவகசிந்தாமணி | ரூ. 25-00 |
| திருவிளையாடற் புராணம் | ரூ. 30-00 |

வெளியீடு

**அணியகம்**

5, செல்லம்மாள் தெரு,
சென்னை-600 030

# முன்னுரை

தேமதுரத் தமிழ் ஓசை இன்று உலகமெங்கும் ஒலிக்கிறது; புதிய சிந்தனைகளை உலகம் எதிர் நோக்குகிறது.

இராமாயணம், பாரதம் இவை சமய பிரச்சார நூல்கள் ஆகிவிட்டன. இன்று சமயம் மக்களுக்கு ஆறுதல் அளிக்கிறது; இந்த உலக நடப்புகளை மறக்கச் செய்கிறது. மன ஆறுதல் தருகிறது; அதற்கு இவை உதவுகின்றன.

காலம் காலமாக அவற்றை எழுதிவருவதால் புதிய பார்வை காண முடியவில்லை. இலக்கியம், சமயச்சார்பு பெற்ற பிறகுதான் அது பரவ ஆரம்பித்தது.

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் சமண காவியம் என்பர், மணிமேகலை புத்த காவியம்; சமயச் சார்பு இல்லாமல் எந்த நூலும் தமிழில் செல்வாக்குப் பெற்றதில்லை.

புதுக்கவிதை எழுத இக் காவியத்தைத் தொட்டேன்; பழைமையைப் பிரச்சாரம் செய்ய முடியவில்லை. புதிய கருத்துகள் தாமாக வந்து இடம் பிடித்தன. இந்நூல் சமயச் சார்பு நீங்கிய நிலையில் உருப்பெற்றது; அதற்குப் பொறுப்பு, காலத்தின் தாக்கம்.

கம்பராமாயணம் நான்கு ஆண்டுகளுக்கு முன் எழுதி வெளியிட்டிருக்கிறேன். அது கம்பர் படைப்பின் கவி பெயர்ப்பு; உள்ளதை உள்ளபடி எழுதினேன்; அது உரைநடை ஆக்கம்.

பரிசுமணம் என்ற சிறுகதைப் படைப்பு வெளி யிட்டேன்; அது வாழ்க்கையில் இருந்து எடுத்த கருக்கள்! படைப்பிலக்கியத்தில் கால் ஊன்றிய பிறகு என் எழுத்துப் புதிய மாற்றம் பெறுகிறது.

என் உரைநடை நூல்கள் புதுக் கவிதையின் தாக்கம்; கவித்துவம் நிறைந்தவை; என் எழுத்துப் பயிற்சி புதுக்கவிதை படைக்கத் துணை செய்தது.

உரை நடையையே கவிதை வடிவு தர முடிந்தது. புதிய உவமைகள், உருவகங்கள், அனுபவங்கள், சிந்தனை கள் அணி சேர்த்தன. புதிய ஓட்டம் தந்தது. நண் பர்கள் நயந்தார்கள்; நூல் வெளிவர ஊக்குவித்தார்கள்; இந்த நூல் வெளியிட அவர்கள் ஊக்கம்தான் காரணம்.

இதனை அடுத்து 'திரௌபதி சூள் உரை' எழுதி உள்ளேன்; அச்சகம் காணும்; அதுவும் உடன் வெளி வருகிறது.

**ரா. சீனிவாசன்**

# தெய்வத் திருமகன்

## 1. பால காண்டம்

மானிடத்தின் வெற்றியை
உலகுக்கு உணர்த்திய
மனிதமகன் இராமன்;
அவனைத் தெய்வ மகன்
என்று காவியங்கள் பேசின:
அது காலத்தின் கட்டாயம்.

மக்கள் தன்னம்பிக்கை இழந்து
விட்டனர்; அவர்களைக் காப்பாற்ற
இந்தத் தெய்வநம்பிக்கை தேவைப்பட்டது;
வீரர்கள் வரலாற்றைத் தெய்வக்
கதை என்றுகூறி இவர்களை
அவதார புருஷர் என்று அறிவித்து
வருகின்றனர்.

மனிதன்தான் தேவன் ஆகிறான்;
இதை மாற்றி எழுதிவிடுகிறார்கள்;
தெய்வந்தான் மனிதனாகப் பிறந்தான்
என்று கதைகட்டித் தீட்டி வைத்தனர்;
இதனைத் தெய்வமாக் கதை என்று
கம்பன் விளம்பரப் படுத்தினான்;
அவன் படைப்புப் பார் அளந்தது.

இராமன் பிறந்த நாடு
கோசல நாடு ; அதன் தலைநகர்
அயோத்தி ; அது இன்று பிரச்சனை
ஆகிவிட்டது ; இந்துக்களின் மெக்கா
என்று பிரச்சாரம் செய்யப்படுகிறது.

இராமன்கதை தனிமனிதன் கதை
அன்று ; தேச சரித்திரம் ;
அதனால் அவன் முன்னோர்கள்
பெருமை முன்னுரையாகத் தரப்படுகிறது.

குலத்தில் சிறந்தவர்களே நலத்தில்
திகழ்வர் என்ற நம்பிக்கையும்
இதற்கு ஒரு காரணம் ஆகிறது.

தசரதன் இராமனின் தந்தை ;
கோசல நாட்டை ஆண்டவன் ;
சத்தியம் தவறாதவன் என்று
சரித்திரம் பேசுகிறது ! அவன்
வாக்குத் தவறவில்லை ; அதனால்
வந்த வினைதான் இந்தக் கதை,

தசரதன் முன்னோர்கள் 'கின்னஸ்'
புத்தகத்தில் தமக்கு எனத்
தனிப் பதிவுகளைத் தேடிக் கொண்டார்கள்.

மனு என்பவன் நீதி நெறிகளை
வகுத்துத் தந்தவன் என்று கூறுவர் ;
அவன் எழுதிய நூல் சாதிக்கு
ஏற்ப நீதிகளைக் கூறுகிறது
என்று குறை கூறுபவரும் உளர்,

ஆதி சட்ட நூல் தொகுத்துத் தந்த
அம்பேத்கார் என்று அவனைக் கூறலாம் ;
அவன் முற்பட்டவருக்கு முன்னுரிமை
தந்தான் ; இவர் தாழ்த்தப்பட்டவருக்குச்
சலுகைகள் பெற வழிவகை செய்தார் ;
இரண்டும் இவ்வகையில் ஒத்து விளங்குகின்றன.

கங்கை காவிரி இணைப்பு
இன்று தேவை என்பதை
எடுத்துப் பேசி ஏற்றம் தருவர்.

பகீரதன் இதற்குச் சுழி
போட்டுத் தொடக்கி வைத்தான் ;
இமயத்தினின்று ஒழுங்காகக்
கங்கை பாய இவனே திட்டம்
வகுத்தான் ; இவன் முயற்சி
பகீரதப் பிரயத்தனம் என்று
இன்றும் பாராட்டப் படுகிறது.

காகுத்தன் என்ற அரசன்
தேவர்களின் ஆகுலங்களைத்
தீர்த்தவன் ; அசுரரோடு பொருது
வென்றவன் என்று ஒரு கதை
கூறப்படுகிறது ; அது புராணக் கூட்டல்.
இரகு என்ற அரசன்
நல்லாட்சி செய்தான் ; இவன்
புகழைத் தொடர்ந்து பேசி
வந்திருக்கிறார்கள் ; அதனால்
இரகுகுல திலகன் என்று
இராமனை அழைத்து வந்தனர்.

**நாட்டு வளம்**

சம்பாப் பயிர் சாவி ஆகி
விடுகிறது ; கருநாடகம்
கண் திறந்தால்தான் கணுவாய்கள்
திறக்கும் ; நீர் வழிப்படும் ;
இந்த நிலை அந்த நாட்டில் இல்லை.

குடிக்க நீர் தேவை என்றால்
கோடிக் கணக்கில் கொட்டித்
தந்தால்தான் ஆந்திரநாடு
கால்வாய் வெட்டித் தருகிறது ;
கிருஷ்ணா நதி நீரை
நகர்கள் எதிர்பார்க்கின்றன.

வீராணம் அது தோல்வி பெற்றது ;
ஒரே ஒரு நன்மை ;
நடைபாதை வாசிகளுக்கு
மழைக்கு ஒதுங்க அவை
குகைக் கோயில்களாகி உதவுகின்றன.

சரயூநதி பாய்ந்து அவர்களுக்குச்
சகல நன்மைகளையும் தந்தது ;
மலையிடைப் பிறந்த மணிகளை
அலைகளில் கொணர்ந்து சேர்த்தது.
சந்தனம், அகில் இவற்றைக்
கடத்துவதில் வீரப்பனாக விளங்கியது ;
நாட்டில் செல்வம் கொழிக்க
இவை வழிவகை செய்தன,

**கல்வி**

''ஆண்களோடு பெண்கள்
சரி சமமாக வாழ்வம் இந்த
நாட்டிலே''- ஒரு குரல்
எழுந்தது பாரதியின் பாட்டிலே.

பெண்களுக்குச் சம உரிமை
என்று பேசப்படுகிறது;
அன்று பெண்களுக்கு முழு உரிமை
தரப்பட்டது ; கல்வி கற்பதில்
அவர்களுக்கு முன்னுரிமை தரப்பட்டது.

அன்று அவர்கள் வேலை செய்து
உலையில் அரிசி போடவில்லை ;
அரிசி வீட்டுக்கு வந்தது ;
அவர்கள் வீட்டரசியராக விளங்கினர்.

அறங்கள் செய்வதில் அவர்கள்
ஆர்வம் காட்டினர் ; அன்னை
தெரிசாவாக நலிந்தவர்களுக்கு
அவர்கள் தொண்டு செய்தனர் ;

காணார், கேளார், கால்முடப்பட்டோர்
இவர்களுக்குப் பொருள் தந்து
அவர்களை முழுமை யாக்கினர்.
அவர்களுக்கு உதவி தேவைப்பட்டது.

வறுமைக் கோடு என்று
எந்தக் கோடும் அன்று

கிழிக்கப்படவில்லை ; கேடு
எதுவும் இன்றி மக்கள்
செழுமையோடு வாழ்ந்து வந்தனர்.

அந்த நாட்டில் ஒரு கொடிய சட்டம் ;
யாராவது வள்ளல் என்ற சொல்லி
வார்த்தை தவறிப் பேசி விட்டால்
அ.பி.கோ சட்டப்படி அவர்களை உள்ளே
தள்ளினர் ;
துபாய் நாட்டின் தாக்கம் இங்கே ஏற்பட்டது;
கொடுக்கும் கரத்தை வெட்டி விட்டனர்.
அங்கு இரப்பவரும் இல்லை ;
ஈந்து புரப்பவரும் இல்லை ;
உடைமை என்பது பொதுஉடைமை;
இல்லாதவர்களே அங்கு இல்லை ;
அதுதான் அங்கு இன்மை எனப்பட்டது.

உழைப்புக்கு ஊதியம் பெற்றனர் ;
பிழைப்புக்கு என்று கை நீட்டியது இல்லை ;
கொடை என்பது முற்றிலும் தடை செய்யப்
பட்டது.

**சீர் மிக்க ஆட்சி**

அன்று தேர்தல் அடிப்படையில்
ஆட்சிகள் அமைய வில்லை ;
அதற்கு அவசியம் ஏற்பட்டதில்லை.

மக்களுக்குச் சேவை செய்வதை
விட்டுத் தம் தேவைகளை நிரப்புவது
இன்றைய அரசியல் சீர்கேடு.

மன்னர்கள் மக்கள் தலைவர்கள் ;
போர்க் களங்களில் முன் நின்று
உயிர் விடுவர் ; வீரர்கள் அவர்கள்.

மக்களைத் தம் உயிர் என
மதித்தனர் ; அதனால் தேர்தல்
களங்கள் தேவைப்படவில்லை ;
சேஷனுக்கு அங்கு விசேஷம் தரப்படவில்லை.

**தசரதன் குறை**

ஒருத்திக்கு மூவர் அவனுக்கு
மனைவியர் ; எனினும் விருத்திக்கு
ஒரு பிள்ளை அவர்கள் கருதரிக்கவில்லை ;
அது அவனுக்குக் கவலை தந்தது.

வசிட்டர் அவன் குலகுரு ;
அரசியலுக்கு அமைச்சர்
தேவைப்பட்டனர் : இது குடும்ப
விளக்குப் பற்றிய விமர்சனம்;
அதனால் குருவிடம் விளக்கம் கேட்டனர்.

பூஜைகள் சடங்குகள் இப்படி
ஏதாவது செய்தால் குழந்தை
பிறக்கும் என்று அவர்களுக்கு
அறிவுரை தந்தார் ; அது அந்தக்
காலத்து வழக்கம் என்று தெரிகிறது.

குழந்தை வேட்கை வேண்டி
வேள்வி செய்தால் குழந்தை
பிறக்கும் என்று அவர் அறிவித்தார்.

அது மூட நம்பிக்கை தான் ;
என்றாலும் அதனால் நன்மைகள்
விளைகின்றன ; புதிய
நம்பிக்கைகள் தோன்றுகின்றன.

அந்த நம்பிக்கையை இந்த
வேள்வி அவர்களுக்குக்
கொடுத்து உதவியது : அதனைச்
செய்ய ஏற்பாடு ஆகியது.

வேள்வித் தீமுன் ஓமம்
எழுப்பப் புரோகிதன் ஒருவன்
தேவைப்பட்டான் ; இன்னார்
முன் இருந்து செய்தால்தான்
நல்லது நடக்கும் என்ற
நம்பிக்கை அதற்குக் காரணம் ;

கலைக் கோட்டு முனிவன்
ஒரு ஆசான் இருந்தான் ;
அவன் ஒரு நாட்டில்
கால் அடி வைத்ததால்
மழை பெய்தது என்ற
செய்தி அவனுக்கு விளம்பரம் தந்தது.

இவன் காட்டு வாழ்க்கை
வாழ்ந்து வளர்ந்தவன் ;
பெண்கள் அவனைச்
சந்தித்தது இல்லை : அதனால்
அவன் சுதத பிரமச்சாரி
என்று பெயர் எடுத்தான்,

அவனை மயக்கி இழுத்து
வருவது பெரும்பாடு ஆயிற்று ;
கணிகைப் பெண்கள் சிலர்
சென்று அவனை மயக்கிப் போட்டு
ஊருக்குள் இழுத்து வந்தனர்.

நாட்டு எல்லையில் கால்
வைத்தான் ; அவன் வந்தபோது
மழை தொடர்ந்து கொட்டியது ;
இவன் வந்ததால்தான் மழை
அங்குப் பெய்தது என்று ஒரு
கதை கட்டி விட்டனர்.

அந்த பிரம்மசாரி பார்க்கக்
கொஞ்சம் அழகாகவும் இருந்தான் ;
உரோம பாதன் என்ற அரசன்
அவன் மகள் இவனைக் கண்
கொண்டு பார்த்தாள்; அவனே
தனக்குத் தேவை என்று தந்தையிடம்
கூற அவனை அவர் மருமகன்
ஆக்கிக் கொண்டார் ; அவன்
அங்குத் தங்கி இருந்தான்.

புரோகிதம் செய்ய அவனே
தக்கவன் என்று வசிட்டர்
சிபாரிசு செய்தார் ; உடனே
தசரதன் சென்று அவனை அங்கு
அழைத்து வந்து சேர்த்தான்.

## மகவு வேட்கை வேள்வி

ஓம குண்டம் அமைத்து
யாக வேள்வி எழுப்பினான் ;
அதில் ஆகுதி இட்டுத்
தெய்வங்களுக்கு உணவு படைத்தான்.

அந்தக் குண்டுக் குழியில் எரிந்து
அவிந்த சாம்பர் துகள்களை நீர்
அது புனிதநீர் எனப்பட்டது ;
அதில் கலந்து தெய்வச் சாயம் பூசி
அது அவன் மனைவியர்க்குக்
குடிக்கத் தரப்பட்டது. அது தீர்த்தம்
என்று தீர்த்துச் சிறப்பிக்கப்பட்டது.

வேள்வி நடந்து முடிந்த
நாட்கள் சில கழித்து அந்த
மனைவியர் மூவரும் தாயர்
ஆயினர் ; கருத் தரித்தனர்

சுமத்திரைக்கு இரட்டைப்
பிள்ளைகள் ; மற்றவர் இருவருக்கும்
ஓர் ஒரு பிள்ளைகள் ; கோசலைக்கு
இராமன் ; கைகேயிக்குப் பரதன்.

மக்கள் நால்வர் தசரதனுக்கு
வாய்த்தனர் ; வாழ்வு மலர்ந்தது.

அரச குடும்பத்தில் பிறந்தவர்கள்
அதனால் கல்வி கேள்விகளில்
அவர்கள் நூற்றுக்கு நூறு என்று பேசப்பட்டனர்.

விடுதிகளில் விட்டு அவர்களைப்
படிக்க வைக்கவில்லை ; அதனால்
போதை வஸ்துக்கள் அவர்கள்
பழகிக் கொள்ளவில்லை ; புகை,
பீடி, சிகரெட்டு அவற்றை
ஆரம்பக் கல்வியாகப் பயிலவில்லை.

வில்வித்தையில் அவர்கள்
பயிற்சி பெற்றனர் ; அது அவர்களுக்கு
வேண்டிய தொழிற் கல்வி.

**விசுவாமித்திரர் வருகை**

மன்னன் தசரதன் எதிர்பார்க்கவில்லை ;
தாடி வைத்த சந்நியாசி
விசுவாமித்திரர் அரசு அவைக்கு
வந்தார் ; மன்னன் அதிர்ந்தான்.

துருவாசர் விசுவாமித்திரர்
இவர்களைக் கண்டாலே
அரெஸ்டு வாரண்டு கண்டு
அஞ்சும் மாஜி அமைச்சர்கள் ஆயினர்;

மாறுபட்டு நடந்து விட்டால்
அவர்கள் சீறிச் சபிப்பார்கள் ;
பிறகு முறையீடு செய்தால்
ஆயுள் தண்டனையாக மாற்றுவார்கள்.

அட்லாண்டிக் விளையாட்டுப்
பயிற்சியில் தங்கப் பதக்கங்களைப்
பெற்றால் ஜனாதிபதி அவர்களுக்குப்

பரிசு தந்து பாராட்டுதல் செய்கிறார் ;
தாமிரப் பதக்கம்தான் பெற்றார்கள் என்பது
செய்தி.

அழகியர் போட்டியில் அவைமுதியோரைக்
கவர்பவர் பேரழகி என்று
பேசப்படுகிறாள் ; அவளுக்கு
உலகம் சுற்றிவர ஒரு
உல்லாச டிக்கட்டு அளிக்கப்
படுகிறது ; புதிய படம் எடுப்பவர்
அவளை வைத்துக் கோடிகள் அடுக்குகின்றனர்.

இராமன் விற்பயிற்சியில் மிக்கவன்
என்ற புகழ் திக்கெட்டும் பரவியது ;
விசுவாமித்திரனுக்கு இக்கட்டு ஏற்பட்டது.
அதனால் அவனை அழைத்துச்
செல்ல இந்த முனிவர் அங்கு வந்து சேர்ந்தார் ;

அமர்ந்து சிறிது நேரம் ஆகியது;
'கொக்கோ ஹார்லிக்ஸ் டீ'
என்று முகமனாகக் கேட்கப்பட்டது.
'வேண்டாம் நன்றி' என்று அவர் பதில் தந்தார்.

உங்களுக்கு ஏதாவது செய்ய
இயலுமா என்று வணிக இயல்
பேசி அவர் வாயைத் திறக்க வைத்தான்.
'மகனைத் தன்னுடன் அனுப்புக'
என்று வினயமாகக் கேட்டு வைத்தார்.
அனுப்புவது யோசிக்கத் தக்கது என்று
யாசித்து உரைதந்தான் தசரதன்.
ஆவேசம் கொண்டார் தவசி ;
அவனைத் துவேஷித்துப் பேசி

அரச அவை விட்டு மன்றத்
தலைவர்யாரும் சொல்லாமலேயே
வெளிநடப்புச் செய்தார் ; அவர் முனிவர்,
வசிஷ்டர் எழுந்தார் ; ஒழுங்குப்
பிரச்சனை கொண்டு வந்து
அவரை இருக்கும்படி வேண்டிக் கொண்டார்.
''விசா வீடு தேடி வருகிறது ;
அவனவன் அமெரிக்க கவுன்சில்
முன் கால்கடுக்கக் கியூவில் நிற்கிறான் ;
தேடி வந்த செல்வம். அதைத்
தள்ளுவது மடமை ; அவருடன்
செல்லுவது தகைமை'' என்று அறிவுரை
தந்தார்.
மறுப்புரை ஏதும் கூறாமல்
முனிவர் விருப்பை ஏற்று இராமனை
உடன் அனுப்பி வைத்தான் ;
உடன் செல்ல இளங்கோவும்
எழுந்தான் ; அவனைத் தடுக்கவில்லை.
உடன் செல்ல ஒருவர்
தான் தேவை ; இருவர் வருகின்றனர்
என்றால் பயன்பாடு உண்டு ; மறுப்பது
நயன்பாடு அன்று என்று ஏற்று
இருவரையும் ஏற்க உடன்பாடு கொண்டார்.

**தாடகை வதம்**

நாட்டைவிட்டு அவர்கள் வெளியே
சென்றது இல்லை ; கூட்டில் அடைபட்டு
இருந்த பறவைகள் சிறகை விரித்துப் பறந்தன.
காட்டு வாழ்க்கை அவர்களுக்கு

முனிவரால் அறிமுகம் ஆகியது ;

வழி நெடுக ஆசிரமங்கள் ;
அங்கங்கே தவசிகள் ஒதுக்குப்புறம்
தேடி அங்கே தங்கி இருந்தனர்.

வாழ்க்கைக்கு அஞ்சி ஓடுவதற்கு
வழிகளைத் தேடுபவர் பலர் ;
சிலர் குடி மயக்கம் தேடுவர் ;
சிலர் பெண் முயக்கம் நாடுவர் ;
ஒரு கோப்பையிலே மது ; மறு
அணைப்பிலே அழகிய மாது;
இதுவும் தப்பி ஓடும் வழியே.

இந்த வாய்ப்பைத் தவற
விட்டவர்கள் சந்நியாசிகள்
என்று உபந்நியாசம் செய்யப்படுகிறது.
மதம் என்பது அபின் என்பர் ; அது
மிகைப்பட்ட கூற்று ; தப்பித்துச்
செல்ல அது வழி தருகிறது ;
இது முதியவர்களுக்குத் தேவை ;
குளிருக்கு அதில் பதுங்கிக் கொள்வர்.

இதனால் எந்தத் தீமையும் இல்லை ;
ஒதுங்கி வாழ அவர்களுக்கு
இது வழி வகை செய்து தருகிறது.

வாழ்க்கை நெரிசல்கள் பல ;
அவற்றில் புதைந்து போகாமல்
தற்காப்புத் தருவதும் இந்த மதமே.

மதம் வாழ்க்கையில் ஒரு கூறு.
அதுவே வாழ்க்கை என்று கொண்டால்
அது முழுக்க முழுக்க மதுச் சாறு ;
'கிக்' வராமல் பார்த்துக் கொள்வது தக்கது.

கல்லூரிகளில் ஒவ்வொரு விடுதிகளில்
ஒரு பெயர் புதிது எழுதப்படுகிறது ;
கவிஞர்களைப் போற்றுகிறார்கள் ; அதனால்
கம்பர் இல்லம், இளங்கோ வளாகம்
என்று அவர்களுக்குத் தங்க வீடு தருகின்றனர்.

ஊர்களின் பெயர்கள் அவை
மறு பிறவிகள் எடுக்கின்றன ;
பம்பாய் மும்பை ஆகிவிட்டது.
இரண்டுக்கும் என்ன வித்தியாசம் ?
அது நமக்குத் தெரியாது.

நேரு நகர் காந்தி நகர்
இவர்கள் பெயரில் மாநகர்களை
உரிமை செய்து தந்திருக்கிறார்கள் ,
புதிய பெயர்கள் இடம் பெறுகின்றன ;
மதராஸ் சென்னை ஆகிவிட்டது.

காமாச்சிரமம் என்று ஒரு
பெயர் ஒரு ஆசிரமத்துக்கு
வழங்கியது ; இவர் யார் ?

சிறை சென்று செக்கிழுத்த செம்மலா ?
காதல் மன்னன் ; டியூயட் நாட்டியன் ;
அவனை மதித்துப் போற்றினர்.

காமன் சிவனை எதிர்த்து
நாசம் ஆயினான், அதற்கு
இது ஒரு அடையாளக் கொடி ;
தீபாவளிப் பரிசு ; சூப்பர் குலுக்கல் ;
நரகாசுரனுக்கு விழா எடுத்தனர்,

காம உணர்வு வாழ்வின் தூண்டுதல் ;
அதுதான் காதலாகப் பரிணமிக்கிறது ;
இரண்டு துருவங்களை ஒன்று சேர்க்கிறது ;
இன்ப வாழ்வை அமைத்துக் கொடுக்கிறது.

அதுவே கட்டுக்குள் அடங்காவிட்டால்
சிறைக் கூட்டுக்குள் தள்ளி விடுகிறது ;
குற்றங்களுக்கு இது தாயகம் ;
அதன் தலைவனைக் கண்டு அஞ்சுகிறார்கள்.

இவனைக் கண்டு ஏன் அஞ்சுகிறார்கள் ?
அருணா கிரியார்கள் அவர்கள் ;
அகலுகிறார்கள் ஆன்மீக வாதிகள்,

அந்த இளம் பிஞ்சுகள்
உள்ளம் இந்தக் கதைகளைக்
கேட்டு வியந்தது ; முதியவர்களின்
மன இயல் அறிந்தது.

இதைப்போல் ஒவ்வொரு
குடியிருப்புக்கும் ஏதோ
ஒரு பின்கதை
இருந்தது ; அது கேட்பதற்குச்
செவி விருந்தாக அமைந்தது.

**தாடகையைச் சந்தித்தல்**

தண்டக வனம் என்ற இடத்தை
மூவரும் அடைந்தனர் ; அது
ஒரு கண்டனக் காடு ;
மரங்கள் உலர்ந்து கிடந்தன.

எங்கும் எலும்பும் கூடுகளும்
சிதறிக் கிடந்தன ; சுடுகாட்டுச்
சூழல் அது என்று அவர்களுக்கு
அறிமுகப் படுத்தப் பட்டது.

இந்தச் சூழலுக்கு யார்
காரணம் ? இப்படிக் கொலைகள்
செய்து அலைவுறுத்தியது யார் ?
இந்த வினாவை இருவரும்
கேட்டனர் ; விடை கூறுவதற்கு
முன் பதில் அங்கு வந்து நின்றது.

குண்டு வடிவத்தில் ஒருத்தி
உருண்டு அங்கு வந்து நின்றாள் ;
குண்டோதரி என்று அவளை
அழைக்கலாம் ; பயங்கரவாதி ;
தாடகை என்பது அவள் பெயர்.

அங்கிருந்த தவசிகளை, வழிப்
போக்கர்களை அடித்து வீழ்த்தியவள ;
அக்கிரமங்களை ஆதியோடு அந்தமாகச்
செய்தவள்.

தவசிகள் வேள்விகள் செய்வதை
அவள் தடுத்து ஒழித்தாள் ;
இது கலாச்சாரப் போராட்டம்,
அவை தேவையற்றவை என்பது அவள் கருத்து ;
தவசிகள் காட்டில் ஆக்கிரமிப்பதைத் தடுத்தாள்.

அவள் சிரிப்பு கொக்கரிப்பு.
கொடுமை மிக்கவள் ; கொலை வெறி
அவள் கண்களில் கனல் பொறி.

இதுவரை கொத்தவரங்காயைக்
கண்டவள் ; இப்பொழுது அவள்
கண்டது பூசணிக்காய்கள் ;
அரச இளம் வாலிபர்கள்.

இவர்கள் இந்தத் தவசிகளுக்குக்
காவலராக வந்து உள்ளனர் ;
கையில் வில்லும் அம்பும் தாங்கி
உள்ளனர் ; அதனால் அவர்களைக்
கொல்லுதல் தேவை என்று தன்
கைச் சூலத்தை அவர்கள் மீது
எறிந்தாள் ; அது இராமன்
அம்புக்கு ஆற்றாது அலங்கோலப்பட்டது.

சூலம் முறிந்தது ; அவள் ஓலம்
இட்டாள் ; கைகளால் மோதி
இவர்களைக் கொல்ல நினைத்தாள் ;
அது அவளால் இயலவில்லை.

உயிர் தப்பி ஓட நினைத்தாள் ;
அவள் செயலற்று நின்றுவிட்டாள் ;
அவளை மன்னித்து விடுவதா ?
மண்ணில் சாய்த்து வீழ்த்துவதா ?
இதற்கு விடை காண விசுவனை
அவர்கள் எதிர்பார்த்தனர்.

''பெண்கொலை பாவம்தான் ;
ஆனால் இவள் வடிவால் பெண் ;
செயலால் அரக்கி ; வீழ்த்தப்
பட வேண்டியவள்'' என்றார்,

வேறு வழி இல்லை ; அம்பு
ஒன்று தொடுத்து அவள் மார்பில்
பாய்ச்சினான் ; அது அங்குத்
தங்க மறுத்துவிட்டது ; அது
ஊடுருவி முதுகுவழி வெளிச் சென்றது.

கற்றவர்கள் தாம் ; அறிவாளிகள் தாம்
என்றாலும் பதவிகள் கைக்கு வந்தால்
அறிவு திரிந்து கொள்ளை அடிக்கிறார்கள் ;
இவர்களைத் திருத்தவே முடியாது ;
இவர்களுக்குக் கூறும் நல்லுரைகள்
மனத்தில் தங்குவது இல்லை ; அது
அவர்களை விட்டு அகன்று விடுகிறது.

நெடுமரம் கீழே சாய்கிறது ;
அதுபோல் அவள் படுபிணம் ஆயினாள் ;
இராமனின் வில் திறத்தைக்
கண்டு முனிவன் வியந்தான் ;
அவள் கூவிய குரல் கேட்டு
அவள் மக்கள் இருவர்
சுபாகு மாரீசன் அங்கு
ஓடோடி வந்தனர் ;
இராமன் அம்புக்கு ஆற்றாது
சுபாகு இறந்தான் ; மாரீசன்
உயிர் தப்பி ஓடி மறைந்தான்.

**வேள்வி முடித்தல்**

அந்தக் காட்டுப் பெருவெளியில்
அக்கினி வகையறா இவற்றை எழுப்பி
வேள்வி தொடங்க நினைத்தான் முனிவன்.

அறிவு இயக்க இளைஞர் வேள்வி செய்வதை
எதிர்த்துப் பிரச்சாரம் செய்தனர் ;
அவசரப் பட்டனர் ; சில சமயம்
அதிர் வேட்டுகள் வைத்துக் கலைத்தனர்.
சாத்திரம் கற்ற சந்நியாசிகள்
அவர்கள் என்ன செய்வார்கள் ?
சுருதிகளைக் கற்றார்கள் அவை
வேளவிகளை வலியுறுத்தி எழுதின.

சங்கரர் சாற்றிய ஞான உரை
அதை அவர்கள் கற்க மறுத்தனர்.
சடங்குகள் அவர்களுக்கு
வழித்தடங்கள் ஆயின.

சுதந்திரத் திரு நாட்டில்
யார் வேண்டுமானாலும் சட்டைகளைக்
கிழித்துக் கொள்ளலாம் ; அது
அவர்கள் சுய விருப்பம்.

இந்த இளைஞர்கள் அறிவுப்
பிரச்சாரம் செய்ய உரிமை உண்டு ;
வேள்விகளை அழிக்க முயன்றது தவறு ;
அதற்காக அவர்கள் கற்களை வீசினார்கள் ;
இந்த முனிவர்கள் இராமனிடம் முறையிட்டனர்.

இராமன் இலக்குவன் இருவரும்
வில் ஏந்திய வீரர்கள் ; அவர்களிடம்
அந்த இளைஞர்களை
இந்த முனிவர்கள் கொடியவர்கள் என்றனர்.

அவர்களை அடித்துத் துரத்தி
முனிவர்களுக்கு உதவி நின்றனர் ;
விசுவன் வேள்வியை முடித்துக் கொண்டான்.

**கல் உயிர் பெற்றது**

''அடுத்த பயணம் எங்கே'' ?
என்பது அவர்கள் தொடுத்த வினா.
''மிதிலையில் வேள்வி ஒன்று
சனகன் நடத்துகிறான் ; அங்கு
நம் பயணம்'' என்றார் முனிவர்.
புதிய நகரைப் பார்க்க
அவர்களுக்கு விழைவு ஏற்பட்டது ;
நகர் நோக்கி நடந்தனர்
வழியில் ஒரு சிறு நிகழ்ச்சி.

அங்கே ஒரு பெண்
சந்தியில் நின்று இருந்தாள் ;
பிறர் கையேந்தி நின்றாள்.
கிழிச்சல் புடவை ; அலைச்சல் மயிர்முடி ;
மேற்குடி வாசி ;
பெயர் அகலிகை என்றனர்.

சித்தப் பிரமை பிடித்தவள்
என்று சுத்தப் பிராமணர் கூறினர் ;
பெரிய வீட்டுப் பெண் அவள் ;
அவள் கதை நெஞ்சை உருக்கியது.

வாலிபப் பையன் ஒருவன்
செல்வச் சிறப்பால் சீர் அழிந்தவன் ;

அவளைத் தொட்டு இழுத்துவிட்டான் ;
அவள் கெட்டு விட்டாள் என்று
கதை கட்டி விட்டனர்.

கட்டிய கணவன் கவுதமன் ;
அவன் கோயில் பூசாரி ;
செப தபங்கள் தவறாமல் செய்பவன் ;
அவளை அவன் தன் வீட்டில் சேர்க்கவில்லை ;
அவள் ஓரம் கட்டப்பட்டு விட்டாள்.

உணர்வு எல்லாம் பாழாகி
ஊர் சுற்றி வந்த இந்தப் பெண்ணை
யாரும் மதிக்கவே இல்லை ;
அவள் பெண் என்பதையே மறந்தனர் ;
'கல்' என்று அவளைக் கருதினர் ;
சிலைபோல இருந்த அந்தக் கலையைக்
காகுத்தன் கண்டான் ; கடையில்
ரொட்டி வாங்கிக் கொடுத்தான் ;
அவள் பசி தீர்ந்து மகிழ்ந்தாள்.

அவள் முகவரி கேட்க
அவள் தகவல் ஏதும்
கூறாமல் இருக்க
விசாரித்துத் தெரிந்து
அந்தத் தவசியை அழைத்தான்.

கவுதமன் இராமனை அணுகினான் ;
"வீட்டில் யார் சமைப்பது ?"
என்று கேட்டு வைத்தான் ;
"தானே எல்லாம்" என்று

கண்ணன் போலக் கீதை
மொழியில் பேசினான்.

''இது கொடுமை ; பெண்
அடிமை அல்லள் ; தவறு
செய்வதற்கு அவளுக்கு
வாய்ப்பு உண்டு.

இழுபறி நிகழ்வது
தவிர்க்க இயலாது ;
நீ தவறு செய்யாதே
அது உனக்குப் பெருமை''
என்று அறிவுரை தந்தான்.

கற்பு என்று சொல்லி
மகளிரை அடக்குவது
அவர்களை ஒடுக்குவது
அறியாமை ; தெரியாமை.

அதை இருவர்க்கும்
பொதுநிலை வைப்போம்
என்று கூறுவது உயர்வு.

தவறு செய்வதற்கு
இருவர்க்கும் வாய்ப்பு உண்டு ;
அதை வைத்துப் பிரிவு
தேவை இல்லை'' என்றான்.

அவன் அறிவுரையைத்
தவசியால் ஏற்றுக் கொள்ள
இயலவில்லை ; என்றாலும்
அவள் தனக்குத் தேவைப்பட்டாள்

அதற்காக அதை ஒரு
சான்றாகக் கொண்டு அவளை
அழைத்து வாழ்வு துவக்கினான்.

**மிதிலையில் சானகி**

புதிய ஊர் ; தெருக்கள் பல ;
வீதிவழியே நடந்தவன்
சற்று அண்ணாந்து பார்த்தான்.
வாலிபர்கள் அவர்கள் பார்வை
துருதுருப்புக் கொண்டது ;
வண்ணங்கள் பட்டால் அவர்கள்
எண்ணங்கள் சிதறுவது
இயல்பு ; இராமன் விதிவிலக்கு
அல்ல ; சீதை அவன் கண்ணில் பட்டாள்.

முதற் பார்வையே இருவரையும்
கவர்ந்தது ; இருவரும் இதயம்
இடம் பெயர்ந்தனர் ; காதல்
அவர்கள் இருவரையும் பிணைத்தது.

வில்லை முறித்து அவன் மணந்தான்
என்று மட்டும் கூறி இருந்தால்
அது அவனுக்குப் பெருமை
சேர்த்து இருக்க வாய்ப்பு இல்லை

காதலித்தவளையே அவன்
மணம் முடித்தான் என்பது சிறப்பு ;
அதற்காக அவன் வில்லை முறித்தான் ;

வீர விளையாட்டுக்காக அல்ல
காதலுக்காக அவன் சாதித்த சாதனை.

சித்திரத்தைச் சிந்தையில் தீட்டி
அத்திரத்தோடு சனகன் அவைக்குச்
சென்றான் ; அடக்கமாக அமர்ந்தான் ;
அருகில் தம்பியும் இருந்தான்.

வேள்வி என்று சொல்லி
வேத வியாசர்களை சனகன்
வரவழைத்து இருந்தான்.

''யார் இவர்கள் ? பேர் யாது ?''
''பெரும்புகழ் படைக்கும்
ஆற்றல் மிக்க இளைஞர்கள்''
என்று கேட்டுத் தெரிந்தான்.

தாடகையை வென்று அவன்
சரித்திரம் படைத்தான் ;
அகலிகையை எழுப்பி
அறிவன் அவன் என்பதைக் காட்டி வைத்தான் ;
தசரதன் மூத்த மகன் இராமன்.
இந்த வரலாற்றுச் செய்தியை விசுவன்
வாய்மொழி வழி கேட்டு அறிந்தான்.

விசுவாமித்திரன் நாடு அறிந்தவன்
அவன் ராஜரிஷி ; மன்னனாக
இருந்து அதனால் மதிப்பில்லை
என்பதால் ஆண்டியானவன் ;
வைராக்கியம் கொண்டவன் ;

சாதனை படைத்தவன்
என்பதை சனகன் அறிந்தவன்.

இராமனைக் கண்ட சனகன்
கதை எழுதிப் பரிசு பெறும்
எழுத்தாளன் ஆனான் ; தான்
பெற்றமகளுக்கு வாழ்வு
கிடைக்கிறது ; மகிழ்வு உற்றான்.

உடனே பேசி மணம் நடத்த
விழைந்தான் ; ஆனால் இயலவில்லை ;
காரணம் ; அவனே தனக்கு ஒரு
தளையை அமைத்துக் கொண்டான்.

விருப்பாக இருந்தால் மாற்றி எழுதலாம் ;
இது முடிவு ; மாற்றி எழுத
முடியாது ; இப்படித்தான் இவளை அடைய
வேண்டும் என்று ஒரு தளையைத் தானே
அமைத்துக் கொண்டான் ; அது தடையாகியது.

சானகி பேரழகி ; அதனால் அவளை
மணக்க அரசர்கள் போட்டி இட்டனர் ;
அதைத் தவிர்க்க இந்த ஏற்பாடு.

காலம் காலமாக ஒரு வில்
அவனிடம் எடுப்பார் அற்றுக் கிடந்தது ;
அதன் பழைமை யாருக்கும் தெரியாது ;
அதனால் அது சிவன் கையில் இருந்த
வில் ; அது இவர்கள் கைக்கு
வந்தது என்று ஒரு கதை கட்டி வைத்தனர்.

அந்த சிவதனுசுவை முறிப்பவனுக்கே
உரியள் சீதை என்று விதி வகுத்தான் ;
அது இப்பொழுது அவனுக்கே சதியாகியது.

அவன் தயக்கத்தை அறிந்த இராமன்
வில்லை முறிக்க முன்னுக்கு வந்தான்.
விதியை மீறித் தனிப்பட்டவர்கள் எதுவும்
செய்ய முடியும் அது அவர்கள் உரிமை ;
அரசர்கள் விதிக்குக் கட்டுப்பட்டவர்கள் ;
அதனால் அதைப் பலருக்கும் அறிவித்திருந்தான்.

வில்லுக்கு ஒரு புதுவாழ்வு பிறந்தது ;
எடுத்து முறிக்க ஓர் இளைஞன்
வந்திருக்கிறான் என்று உவகை அடைந்தான்.

இது எடுத்து முறிப்பவனுக்கு
உரியள் இவள் என்று அறிவித்தான் ;
அழைப்பு இராமனுக்குத் தரப்பட்டது ;
விழைந்து அவனும் எடுக்கச் சென்றான்.

அதற்கு என ஒரு விழா
அமைத்தான் ; அரசர்கள் பலர்
அங்கு வந்து கூடி அமர்ந்தனர்.
நாட்டு மக்களில் பெருநிலக்காரர்கள்
குடும்பம் குடும்பமாக வந்து குவிந்தனர்.

இராமனைக் கண்டு அவர்கள் வியந்தனர் ;
“இந்தச் சீதை மிகவும் கொடுத்து வைத்தவள் ;
அழகும் ஆண்மையும் மிக்க இளைஞன்
அவனை அவள் அடைவது உயர்பேறு”
என்றனர்.

சீதை தன் தனியறையில் அந்தப்
புரத்தில் தோழியரோடு காத்து இருந்தாள் ;

தேர்வு எண் வரச் செய்தித்தாளைப்
புரட்டும் மாணவனாக அவள் இருந்தாள்.

தன்னைக் கண்டு காதலித்த இளைஞனே
தன்னை மணக்க வருவான் என்பது
அவள் எதிர்பார்ப்பு ; தவிப்பும் கூட.

வில்லை எடுத்தான் ; எடுத்து முறித்தான் ;
எல்லாம் விரைவில் நடந்து முடிந்தன ;
முறிவு ஒலி அங்கு முழவு எனக் கேட்டது ;
கரம் கொட்டி அனைவரும் கோஷம் செய்தனர் ;
ஆரவாரத்தில் அவர்கள் முழுகித் திளைத்தனர்.

செய்திக்காகக் காத்திருந்த சீதைக்கு
நீலமாலை என்பாள் தோழி ஓடோடிச்
சென்று செய்தி செப்பினாள் ;
கண்டவனே கொண்டவன் எனக் கூறினாள்.

வில்லை முறித்து அவளை மணத்தில்
கொள்ள இருப்பவன் என்று
அவள் விளக்கம் தந்தாள் ; சீதை
உவகையுள் ஆழ்ந்தாள் ; மகிழ்ந்தாள்.

**மண நிகழ்ச்சி**

திருமண ஏற்பு அதன் முடிப்பு ;
அதற்காக அழைப்பு, அறிவிப்பு
தசரதனுக்கு அனுப்பப்பட்டு அவன்
அனுமதி பெற்று நிகழ்ச்சி
நிரல் அமைத்துத் தொடர்ந்தனர்.

தசரதன் தன் அமைச்சர், நண்பர்
உறவினர், மனைவியர், மற்றும் உள்ள
தலைவர்கள், ஊர்ப் பெரியோர்கள்
அவர்களை அழைத்து வந்தான் ; மிதிலையில்
அனைவரும் வந்து கூடி நிறைந்தனர்.

வசிட்டன் முன் இருந்து மந்திரம்
ஓதிச் சடங்குகளை முடித்தான் ;
சனகன் சீதையின் கரம் எடுத்து
இராமன் பிடிக்க அவனிடம் சேர்ப்பித்தான்.

அன்பும் அறனும் இல்வாழ்வின்
பண்பும் பயனும் என்று கூறி
ஆசி வழங்கினான் ; வாழ்த்தும் கூறினான்.

தாலி ஏறியதும் இருவரும் இணைந்து
பந்தலைச் சுற்றித் தம்பதிகள் தாம்
என்பதை அனைவரும் அறியச் செய்தனர்.

வாழ்த்துகள் பெற முன் அமர்ந்திருந்த
பெரியவர்கள் காலில் விழுந்து வணங்கி
ஆசி பெற்றனர் ; பெரியவர்களை மதிப்பது
அவர்கள் காலில் விழுவது என்ற சம்பிரதாயம்
காலம் காலமாகத் தொடர்ந்து வருகிறது.

வசிட்டர் வாழ்த்தை அவள்
முதலில் பெற்றாள் ;
''திருமகளே தசரதனுக்கு
மருமகள் ஆயினாள்''
என்று பாராட்டிக் கூறினார்.

''செல்வத்துள் செல்வம் மக்களைப்
பெறுதல் ; அதைவிட உயர்ந்தது
தக்க மருமகளைப் பெறுதல்
அதுவே மிக உயர்ந்த செல்வம்''
என்று தசரதன் மகிழ்வு கொண்டான்.

விசுவாமித்திரனுக்கு அங்குப்
பெருமதிப்பு ; அந்த இளைஞனை
அழைத்து வந்த பெருமை அவனைச்
சார்ந்தது ; அதனால் அவனைப்
பாராட்டினர் ; நன்றி நவின்றனர்.

மாமியார் மூவரும் மருமகளை
மெச்சினர் ; அவளைப் பெரிதும்
நச்சினர் ; நயத்தக்க
அழகும் நலமும் வாய்ந்தவள்
என்று அவர்கள் நாவார வாழ்த்தினர்.

சடங்குகள் பல நடந்தன ;
அம்மி மிதித்தல் அருந்ததி காட்டல்
இப்படிச் சடங்குகள் நடந்தன.

மணமேடையில் ஒரு சிறு நிகழ்ச்சி
இராமனை மறுபடியும் சீதை
காணவிழைந்தாள் ; அதற்காக
அவள் தன் கைவளையல்களைத்
திருத்துவது போலக் கடைக் கண்
நோக்கினாள் ; அவன் அதை
அறிந்து உள்ளுக்குள் மகிழ்ந்தான்.

சனகன் ஒரே கல்லில் இரண்டு
மாங்காயை வீழ்த்தினான் ; இல்லை
நான்கு கனிகளைப் பறித்தான்.

சீதை தன் வளர்ப்பு மகள் ;
நிலத்தில் கண்டெடுத்த மணி ;
அரசு அவன் ஏற்ற பதவி ;
அவனே நிலத்தை உழுதான் ;
அந்த வகையில் அவன் ஒரு விவசாயி ;
அங்கே சீதை அவனுக்குக் கிடைத்தாள்.

அவனுக்கு மற்றொரு மகள் இருந்தாள் ;
ஊர்மிளை ; அவள் பிறப்பு மகள் ;
அவளை இலக்குவனுக்கு முடித்தான்.
மற்றும் தன் உடன்பிறந்தவனுக்கு
இரு பெண்கள் ; அவர்களை பரதன்
சத்துருக்கனனுக்கு முடித்தான்.

அங்கே மருஇருந்து விருந்து உண்டனர் ;
வந்தவர் அனைவரும் மகிழ்வு கொண்டு
அங்குச் சிலநாள் தங்கினர்.

**அயோத்தி திரும்புதல்**

சொந்த நாடு நோக்கித்
தேர்கள் செயல்பட்டன ;
தசரதன் பெருமகிழ்ச்சியோடு
அயோத்தி திரும்பினான்.
அவன் எதிர்பார்க்கவில்லை
வழி மறிப்புக் கொள்ளை ;
அது பொருள் பறிப்பு அல்ல ;
தேவை இல்லாத அவமதிப்பு.

கையில் ஒரு கோடரி வைத்து
இருந்தான் ; விறகு வெட்டி என்று
நினைத்தனர் ; அவன் தலைவெட்டி
என்று பின்னால் தெரிந்தது.
பரசுராமன் என்று அறிந்து கொண்டனர்.

அவன் அப்பனை யாரோ
ஒரு அரச சாதியன்
கொலை செய்து விட்டான் ;
பழி தீர்க்க இந்த வழி
மறிப்புகள் செய்து வந்தான்.

அரசு என்று பெயர்
வைத்துக் கொள்வதே அவன்
காலத்தில் அபாயமாக இருந்தது.

இராமன் அரச மகன் ;
அதனால் அவன் மீது பகை
காட்டினான் ; அவனைத்
தடுத்து நிறுத்தினான்.

மகா மகோபாத்தியாயர் என்ற
பட்டம் இவனுக்கு வடமொழியில்
கிடைத்தது ; சிவதனுசுவை
வளைத்தான் ; சீர்மை பெற்றான்.

தென் தமிழ்மொழியில் கேள்விகள்
கேட்டு அவனுக்குத் தேர்வு
வைத்தான் ; தன்னிடமுள்ள
மால்தனுசுவை அவன்முன் வைத்தான்.

''வில்லை வளைத்தவன் என்று
விறற் புகழ் நீ கொண்டாய் ;
அதற்காக ஒரு பரிசையும் பெற்றாய் ;
இதனை வளைத்துக் காட்டு'' என்று
அதனை அவன் முன் நீட்டினான்.

எடுத்தான் ; வளைத்தான் ; அம்பை
அதன் மீது தொடுத்தான் ;
''இதற்கு இலக்கு யாது ?'' என்று கேட்க
''இலக்கு என் தவத்தை'' என்றான்.

அவன் ஆணவம் அடங்கியது ;
சாதி வெறி நீங்கியது ;
நீதி நெறி கடைப் பிடித்தான்,
இவர்களுக்குச் செல்ல வழிவிட்டான்.

நிலவில் சுகம் காணத் தேவர்மகன்கள்
நிலா முற்றத்தை அடைந்தனர் ;
பரதன் தன் பாட்டன் வீட்டுக்குக்
கேகய நாட்டுக்குத் தாய்த்திருநாட்டுக்கு
'பேட்டும் கையுமாகப் பயணம்' செய்தான் ;
சத்துருக்கனன் 'ஸ்டம்புகள்' எடுத்து உடன்
சென்றான்;
புது விருந்து உண்ணச் சென்றனர்.

## 2. அயோத்தியா காண்டம்

முதற்காண்டம் பாலகாண்டம் ;
அது இந்தக் காவியத்தின் பாலபாடம் ;
அவர்கள் திருமண விழாவும்
பிள்ளைமைச் செயலே என்று கொள்ளலாம்.

அயோத்தியைத் தசரதன் ஆண்ட
செய்தி இங்குக் கூறப்படுகிறது ;
அதனோடு அவன் மாண்ட
வரலாறும் செப்பப்படுகிறது.

வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை ;
அதற்குக் காரணம் அவன்
நினைப்புவினை ; அவன் வெளுப்பு
நரை ; அது அவன் செவியில்
வந்து சேதி செல்லமாகச் செப்பியது.

''முதுமை உன்னை அழைக்கிறது
பதுமைகளை வைத்து விளையாடுவதுவிடுக ;
தவம் செய்யப் புறப்படு'' என்று
அவனுக்கு அது அறிவுறுத்தியது

"ஆண்டது போதும் இனி ;
வேண்டுவது ஓய்வு" என்று
கருப்புப் பலகையில் வெள்ளைச் சுண்ணாம்பு
அது சாக்குக் கட்டி எழுதிக் காட்டியது.

வாரிசு ஆட்சி அது அக்காலத்து
அரசியல் மாட்சி ; அதன்படி
இராமன் முன் பிறந்தவன்
கியூவில் முதலில் நின்றான் ; தசரதன்
அவனை ஆசனத்தில் அமர்த்த விரும்பினான்.

முகம் பார்க்கும் கண்ணாடி
நகம் சிவக்கும் நங்கையர்க்கு
அழகைக் கூட்டுவிக்கும் 'கால்குலேட்டர்'.

கண்ணாடி முன் நின்று தன்
முகத்தை அதில் பார்த்தான்,
அவன் சுயரூபம் அவனை அதிரவைத்தது.
முதிர்ந்த கோடுகள்
அவன் வயதின் ஏடுகள் அவனைக்
கண்டு எள்ளி நகைத்தன ;
மாற்றத்தால் அவனைத் திகைக்க வைத்தன.

மணக் கோலத்தில் மகனைக் கண்ட
அவன் தான் பிணக் கோலத்தில் மறைவதற்கு
முன்
அரசு கோலத்தில் அவனை வைத்துக்
காண விழைந்தான் ; அமைச்சர்களோடு
இழைந்தான் ; கலந்து ஆலோசித்தான்.

தலைமை அதிகாரி அவன் ஓய்வு
பெறுகிறான் ; அவன் கண்டிப்பான ஆள்;

கீழ்ப் பணியாளர்கள் காசு சேர்த்தால்
அவன் அவர்களுக்கு பிடிவாரண்டு தந்தவன்;
பொல்லாதவன் என்று பெயர் எடுத்தவன்.

அவன் சீட்டுப் பெயர்கிறது என்றால்
கோட்டு அணிந்த சிப்பந்திகள்
அவனுக்கு 'சலியூட்டு' அடிக்கிறார்கள் ;
பிரிவு வாசகம் படித்துப்
பூ மாலைகள் சாத்திப்
'போய் வா' என்று அனுப்புகிறார்கள்.

புகழ் மாலைகள் போட்டுச் சிறப்பிக்கிறார்கள்.
தசரதனை மகிழ்வோடு அனுப்பி
வைக்க அமைச்சர்கள் கருத்துத் தெரிவிக்கனர் :
கண்ணீர் வரவழைக்க கிளிசரின் தடவிக்
கொண்டனர்.

புது ஆள் ; டைகட்டி வருபவன்
அவன் முன் கைகட்டி நிற்க அவர்கள்
காத்திருந்தார்கள் ; காகுத்தன்
தக்கவன் என்று கருத்துத் தெரிவித்தனர்.

இராமன் விளையாட்டு வீரன் ;
கப்புகள் பல கொண்டு வந்து சேர்த்தவன் ;
அவன் படங்கள் பத்திரிகைகளை நிரப்பின ;
'இம்ரான்கான்' அவனை எதிர் நோக்கினர்,
தாடகை பரசுராமன் இவர்களை வென்ற வீரன்.

ஆட்சிகள் இப்பொழுது ஐந்தாண்டுக்கு
ஒருமுறை மாறுகிறது ; தேர்தல்கள்
அவர்கள் காலைவாரி விடுகின்றன ;

பதவிகளில் இருந்து இறக்கப் படுகிறார்கள் ;
அவர்களுக்காக யாரும் இரக்கப்படுவது இல்லை.

அப்பொழுது ஐம்பது ஆண்டுகளுக்கு
ஒருமுறை மாமாங்கம் ; அந்த
நாளை நாட்டு மக்கள் வரவேற்றனர்.

தேர் ஓட்டி சுமந்திரன்
காரை நிறுத்தி விட்டுக்
கதவைத் திறந்து வைத்துக்
கொண்டு இராமனை அழைத்தான் ;
தசரதன் முன் கொண்டு வந்து நிறுத்தினான்.

மகனை அணைத்துத் தன்
மார்பு ஆரப் பிணைத்தான் ;
தழுவினான் ; அவன் தோற்றம்
கண்டு தந்தை ஏற்றம் அடைந்தான்.

சட்டை தைக்கும் தொழிலாளி
அளவு எடுத்துப் பின் கழுத்துக்குப்
பட்டை தைக்கிறான்.

இவன் அவன் ஆற்றல் அளந்து
அறிபவன் போல அவனைத்
தழுவித் தேர்ந்து ஆய்ந்தான்.

''ஆண்டுகள் பல அரசு ஆண்டு
அலுத்துவிட்டேன் ; நிலச்
சுமை தாங்குதல் உன்
கடன்'' என்று அறிவிப்புச் செய்தான்.

ஓய்வு பெற்று விட்டால் என்ன
செய்வது? குட்டைகளைக் குழப்பி

மீன்பிடிப் போரும் உளர் ;
அரசியலை விட்டு அவர்களால்
அகல முடிவதில்லை ; கொண்டு கூட்டி
முடிச்சுகள் போட்டு ஒட்டிக் கொள்கிறார்கள் ;

பண்டைத் தமிழ நூல்கள் இவற்றைப்
புதுப்பித்தார் தமிழ் அறிஞர் உ.வே.சா

அவர் பாதையில் செல்லத் தசரதன்
விரும்பினான் ; இந்துப் பத்திரிகைகளில்
நிகழ்ச்சிகள் வெளியாகின்றன ;
அவை ஆன்மீகம் பற்றியவை.

அதில் ஆளும் கூட்டத்தில் அவன்
ஒருவனாக இருக்க நாட்டம் கொண்டான்.

பற்றுகள் பாசங்கள் இவற்றில்
இருந்து வீடுபெற்று அவன்
பிரம ஞானம் பெற விரும்பினான் ;
முதியவர்களுக்கு இது
கம்ப்யூட்டர் விளையாட்டு.

வசிட்டரை அழைத்து மகனுக்கு
அரசியல் அடிப்படைகளை
அறிவுறுத்தக் கூறினான்,
அது ஜனாதிபதியின் கடமை.

வசிட்டர் இராமனுக்கு அரசியல்
போதித்தார் ; அரிய கருத்துகள் வாதித்தார்,

''காதலுக்கும் அரசியலுக்கும்
கால் கை இல்லை ; யாரோடு

வேண்டுமானாலும் கூட்டுச் சேரலாம ;
சந்தர்ப்பம் சூழ்நிலை இவைதாம்
எதையும் முடிவு செய்வது''

என்று ஒரு சிலர் அரசியல்
பேசுகிறார்கள் ; ''அரசியலில் எதுவுமே
நிரந்தரம் இல்லை'' என்று பேசுபவர்
சுதந்திரப் பிரியர்கள் ;
இவர்கள் தூக்கி எறியப்படுகிறார்கள் ;
அவர்கள் நிரந்தரமாக நிலைப்பது இல்லை.

அரசியல் ஒரு வியாபாரம்;
அறிவாளிகள் புகலிடம்;
கோடிக் கணக்கில் பணம்
குவிக்கும் மடம் என்பது இன்றைய நிலை ;

புகழ்ச்சி அரசியலுக்கு அடிப்படை ;
விழாக்கள் விளம்பரங்கள்
இவற்றை அவர் உபதேசிக்கவில்லை.

சட்டங்களை ஆட்சி அமைக்கிறது
அது சிறுபான்மையருக்குச் சலுகை
தருவது அன்று ; பெரும்பான்மை
மக்களுக்குப் பணி செய்வது.

மக்களுக்கு ஆட்சி பாதுகாப்புத் கருவது ;
நீதி மன்றத்தில் ஆட்சி
தலையிடாது ; தளையிடக் கூடாது.

அரசியல் தலையீடு.
நீதிக்கு முறைகேடு

தவறு யார் செய்தாலும் அவர்கள்
தண்டிக்கத் தக்கவர் என்று

அறிவுரை கூறினார் அவர்.
கொடியவர்களைக் களைவது
களை எடுப்பதுபோன்றது
என்று உவமை கூறினார்.

இன்று களை எடுப்புகள் நடந்து
கொண்டு இருக்கின்றன; புதிய சகாப் தம்
என்றும் காணாத புதிய நிலை
கோர்ட்டில் இன்று மாஜிகள்
நிறுத்தப்படுகிறார்கள் அவர்கள்
விசாரிக்கப்படுகிறார்கள்.

போர் அது பயங்கரமானது ;
நாகசாகி ஹிரோஷிமா
உலகத்துக்குப் பாடங்கள்.
என்றாலும் அணுச் சோதனைகள்
தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

அணு ஆய்வு உற்பத்திகள்
அறவே ஒழிய வேண்டும்;
அதுபற்றி உலகம் தீவிரம்
காட்டுகிறது ; வெற்றி பெறும்.

உலகத்துப் போர் தவிர்ப்புக்கு
உலக ஐக்கிய நிறுவனம்
அமைத்திருக்கிறார்கள் ;
அது மட்டும் போதாது ; உலகம்
முழுவதும் ஒரே ஆட்சிக்குக்
கீழ் வரவேண்டும் ; அதுதான்
போர் தவிர்க்கும் வழி'' என்று
ஒரு புதுக் கருத்தைக் கூறினார்.

அது மட்டும் அல்ல ; அவன் கையில்
மிகச் சிறிய நூல் அதைப்
பரிசாகத் தந்தார் ;
பிரித்துப் பார்த்தான் ;
திருக்குறள் என்று எழுதி
இருந்தது ; இது முப்பாலும்
கூறுகிறது ; பொருட்பால்
அது அரசியல் என்று அறிவித்தார்;
அதற்கு அறத்துப்பால் முதல்படி'' என்றார்.''

**கூனி சூழ்ச்சி**

இராமன் மணிமுடி சூடுகிறான்
இந்தச் செய்தி சூடு பெற்றது ;
இது கூனி செவிக்கு எட்டியது ;
அவள் நெஞ்சில் அது எரிமூட்டியது.

விளையாட்டு வினை ஆகி
விடும்; அதற்கு அவள்
ஓர் எடுத்துக் காட்டு.

அவள் முதுகு கூன் ;
அது பின்புறம் செங்குத்தாய்
நிமிர்ந்து காணப்பட்டது.

இராமன் சிறு பிராயத்தில்
உண்டை. வில்லால்
அதற்குக் குறி வைத்தான் ;

அதன் தழும்பு மாறவே இல்லை.
அது அவன் அழும்புக்கு வழி கோலியது
அவள் கைகேயியின் உயிர்த்தோழி;
அரசியல் அழிவுக்கு
அவள் குழி தோண்டினாள்;
இது சரித்திரச செய்தி.

ஆழ்ந்த பேர் உறக்கத்தில்
அமைதியைத் தேடி
அதன் அணைப்பில் கிடந்தாள்.

கேகயன் மகளைத்
தட்டி எழுப்பினாள் ;
சக்கி முக்கி கல் தெறித்து
நெருப்பை உண்டாக்கினாள்.

இராமன் ஆட்சிக்கு வருகிறான்
என்ற செய்தி கேட்டாள் ;
'மாட்சி மிக்க செய்தி' என்று
அவளுக்கு முத்துமாலை
பரிசாகத் தந்தாள் பாராட்டி.

அதை வாங்கித் தரையில்
கொழித்தாள் ; அதனை அழித்தாள் ;
பழித்தாள் ; பாலில் நஞ்சு சேர்த்தாள்.
தூய அவள் மனம் திரித்தாள்.

மகன்பால் பாசம் என்ற கயிற்றால்
அவளைப் பிணித்தாள் ; தன் போக்குக்குப்
பணித்தாள்; அவளை முழுவதும் கெடுத்தாள்.

கடந்த கால நிகழ்ச்சி அதனைத்
தட்டி எழுப்பினாள் ; அவளைக் குழப்பினாள்;
தசரதன் சம்பராசூரனோடு பொருதநாள்
இவள் அம்பறாத்தூணி தாங்கி நின்றாள் ;
அவன் தேரையும் ஓட்டினாள் ; அவன்
வெற்றிக்கு இவள் நெற்றியில் திலகம் இட்டாள்.

அவள் கை தன் மெய்மீது பட்டதும்,
இவன் மெய் மறந்தான் ; அவள்
வசம் ஆனான் ; அவளைப் பாராட்டினான்.

எது கேட்டாலும் தருகிறேன்
என்று அவசரப்பட்டு வாய் கொழுத்தான்.

இரண்டு வரம் கேட்டு வாங்கிக் கொண்டாள் ;
அந்த நிகழ்ச்சி தோழிக்குச் சொல்லி
இருந்தாள், அதை அவள் நினைவுபடுத்தினாள்.
கையெழுத்து இட்ட வங்கித்தாள்

அது நாள் தேதி போடாத ஒன்று;
அதை அவளை நிரப்பிக் கொள்ளச்
சொன்னான் ; தேதி அவள் விருப்பத்துக்குத்
தசரதன் விட்டு வைத்தான்.

மற்றும் அது வெற்று இடம் விட்டுக்
கையெழுத்திட்ட வங்கித்தாள்;
அதை அவள்தான் மாற்ற முடியும்;
அதில் அவள் இடத்தை நிரப்பினாள்.

அவள் கேட்ட வரம், அதன் தரம்
இது என்று அன்று விவரம் தந்தாள் ;
ஒன்றால் பரதன் நாடு ஆள்வது ;
மற்றொன்றால் இராமன் காடு ஏகுவது.

பெண்டாட்டி பேச்சுக் கேட்பது
திண்டாட்டத்தில் விடும் என்று
வள்ளுவர் கூறியிருக்கிறார் ;
பெண் வழிச் சேறல் அபாயம்
என்று அறிவித்திருக்கிறார்.

தசரதன் இப்படிப் புயல்
கிளம்பும் என்று எதிர்பார்க்கவில்லை ;
கயல்விழியாள் கயமையை
அறிந்து அலறினான் ; நா உளறினான்.

புற்றுக்குள் இருந்து நாகம்
புறப்பட்டு வந்து தலை காட்டியது ;
மகுடி கொண்டு ஊதிப் பார்த்தான்.

அன்று இரவு அந்த அறை
சட்டமன்றக் குழப்பம் ;
கூச்சல், குழப்பம், அடிதடி ;
மைக்குகள் உடைந்தன ;

சட்டைகள் கிழிந்தன ;
கட்டுகளோடு வெளியேறினர் ;
இவை மறக்க முடியாதவை.

வாதங்கள் இவன் பல செய்தான்
அவள் பிடிவாதம் மாறவே இல்லை.
' நீ சத்திய விரதன் ;
உனக்கு இதற்காக நாடு
சிலை வைக்கும் ; மாளிகையும் எழுப்பும் ;

சரித்திரம் உனக்குப்
பக்கம் ஒதுக்கி வைக்கும்;
நினைத்துப் பார்'' என்றாள்.

''இராமன் பிரிந்தால்
என் உயிர் பிரியும் ;
நீ நாளைக்கு விதவை ;

உன் மங்கலக் கயிறு
உன் மகனுக்குக் காப்புக்
கயிறு ஆகும்'' என்று
சோக வசனம் பேசினான் ;
அது ஏகவசனமாக நின்றது.

அவள் உறுதி கொண்டவள் ;
அவன் இறுதிக்கு அஞ்சவில்லை ;
அவள் அன்று இரவு
தூக்க மருந்து இல்லாமலேயே
அமைதியாக உறங்கினாள்.
அவன் அமைதி இழந்து
அலைமோதிக் கிடந்தான்.

பொழுது விடிந்தது ; அவன்
அழுது அயர்ந்தான் ;
எழுந்து இவள் சுமந்திரனை
அழைத்து ஆள் அனுப்பினாள்.

அரசு மாளிகையில் இருந்து
'ஜீப்' வந்து நின்றது; அவன்
தொப்பி சிவப்பு அணிந்து இருந்தான்.

ஏதோ ஆணை வீடு தேடி வருகிறது;
இராமன் சென்று ஏற்றான் ;
அன்னை கைகேயியின் அழைப்பு.

அவனை அவள் மகனாகக் கொண்டவள் ;
நேச மகன் என்று அன்பு செலுத்தினாள்;

அவள் அவனைத் தூக்கி எறிவாள்
என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

காலம் கருதிச் செய்த மாற்றம் இது ;
அவன் அடைந்தது பெரும் ஏமாற்றம்.

சுருக்கமாக அவனிடம் பேசினாள் ;
''காடு சென்று நீ

விண்வெளிஞானம் கற்க வேண்டும் ;
பதினான்கு ஆண்டுகள் காடு ஏகுக!

அங்கே அந்த வசதிகள் உண்டு ;
நீ கற்று நாட்டுக்கு ஞானியாகத்
திரும்பி வர வேண்டும்'' என்றாள்.

பதவி பறிபோகும் என்று
அவன் எதிர்பார்க்கவில்லை.
அவன் எதிர்த்து எதுவும் பேசவில்லை ;

நாடு கடந்து செல்ல அவன்
புதுச்சட்டைகள் தைத்துக் கொண்டான் ;
சடை முடி தாங்கி அவன்
கோசலை முன் நின்றான்.

**கோசலை துயர்**

மணிமுடி சூடி வருவான்
என்று காத்திருந்தாள் கோசலை ;
அவன் சடைமுடி தரித்து
அவள் முன் வந்து நின்றான்.

நாடக ஒத்திகைக்கு அவன்
போட்ட புதிய வேடமோ
என்று அவள் திகைத்தாள் ;
மனம் பதைத்தாள் ; பெற்றதாய்.
''பரதன் நாடு ஆள்கிறான்''
என்றான் ; அதற்கு அவள்
வருந்தவில்லை ''நற்செய்தியே
அது'' என்று அவனிடம் நவின்றாள்.

''நீ திறமைசாலி ;
ஆற்றல் உள்ளவன் ; அவன்

உன்னைவிட நல்லவன் ;
நல்லவர்கள் ஆட்சிக்கு
வரவேண்டும்'' என்றாள்.

''நன்மை அது கருதித்தான்
என்னைக் காட்டுக்கு ஏகுக
என்று தந்தை பணித்தார்''
என்றான் ; புதிது நவின்றான்,

அவள் அதிர்ச்சி அடைந்தாள் ;
அவள் ஒரு குறுக்குக் கேள்வி
கேட்டாள் ; இதை யாரும்

இதுவரை எண்ணிப் பார்த்ததே
இல்லை ; புதிய கருத்து.

''மன்னன் இப்பொழுதுதான்
வாக்குத் தவறி விட்டான் ;
ஆட்சி இராமனுக்கு என்று
அறிவித்து விட்டான் ; அதை

மாற்றுவது வாக்குத் தவறுவது
ஆகாதோ ? என்று ஒருவினா எழுப்பினாள்.

அவனால் மறுத்துப் பேச
இயலவில்லை ; சரித்திரத்தை
மாற்ற விரும்பவில்லை.

ஆட்சி குறித்து அவனும்
கவலைப்படவில்லை ; அவளும்
அதைத் தொடரவில்லை ;

மொத்தத்தில் இது வஞ்சம்
என்று ஒருசொல் மட்டும் விதந்தாள்.

அதற்குள் ''அரசன் அவல
நிலையில் இருக்கிறான்'' என்ற
கவலை தரும் செய்தி அறிவிக்கப்பட்டது.

தாலிபாக்கியத்திற்கு
அவள் தவிக்கும்
நிலை ஏற்பட்டு நின்றது ;

அவன் உயிருக்கு
ஊசல் ஆடிக்கொண்டு
இருந்தான் ; மருத்துவர்கள்
கைவிரித்து விட்டனர் ;

அரசன் மனக் கண்முன்
பழைய நினைவு ஒன்று
நிழலாடியது ; அதை
அவளுக்கு எடுத்து உரைத்தான்.

முன் ஒரு நாள்
வேட்டையாடச்
சென்றிருந்தான் ;

யானை என்று கருதி
ஒரு சிறுவனை அம்பு
எய்து கொன்று விட்டான்.

விழியிழந்த தன்
பெற்றோர்க்கு அச்சிறுவன்
குடிக்க நீர் கொணரக்
குளத்திற்கு வந்து இருந்தான்.

அந்த முதியவர்கள்
அன்று இட்ட சாபம்
இவனும் மகனைப் பிரிந்து
சாக வேண்டும் என்றார்கள்.

''அந்தச் சாபம்
பலிக்காமல் போகாது''
என்று அவன் மனம்
சுருக்காகத் தைத்தது.

அதை அவளிடம் கூறி
அமைதிப் படுத்த
முயன்றான் ; அது
அவன் நிலை அப்பொழுது ;

''அவன் உயிர் இராமன்
பால் இருந்தது'' என்பர்.
உண்மை அதுவன்று ;
செய்த தவறுக்கு வருந்தினான் ;
அதுவே அவனைக் கொன்று கொண்டிருந்தது.

**தம்பியின் சீற்றம்**

அரசு இழந்து அடவி
அடைகிறான் என்ற செய்தி
இலக்குவன் அறிந்தான்;
அவன் துடித்துவிட்டான்.

புரட்சி செய்வது என்று
அவன் புழுங்கி எழுந்தான் ;
சிங்கத்துக்குத் தரப்படும் சிறப்பு
சிறுத்தைக்குத் தருவதை அவன் ஏற்கவில்லை.

''தந்தை தந்த ஆட்சியை
மைந்தன் நான் மீட்டுத்
தருவேன்'' என்று வில் ஏந்தி
நின்றான் ; வீரத்தின் விளைநிலம் அவன்.

சீறும் சிறுவன் அவனைச்
சினம் ஆறும் வகை சில
சொன்னான் ; ''மாறும் வழி

இனி எதுவும் இல்லை'' என்றான்,

கொதித்து எழுந்த கொதி நீர்
அதை அவிழ்க்கக் குளிர்நீர்
தேவைப்பட்டது ; வள்ளுவர்
வாய்மொழி ; ஊழ்,
வடவர் சாத்திரம் கர்மவினை
இரண்டையும் கூறி அவன்
கோபத்தை மாற்றினான்.

தம்பியைத் தடுத்துப் பார்த்தான் ;
அவன் விடுவதாக இல்லை,
தருநிழலாக அவனைத் தொடர்ந்தான்.

அவனும் அண்ணனைப் போலவே
மரஉரி தரித்துக் காட்டுத்துறைக்கு
அவன் தன்னைத் தகுதிப் படுத்திக் கொண்டான்.

தாய் சுமத்திரைபால் சென்று
விடைபெற்று வர நடந்தான்.
விஷயம் அறிந்தவள் அவள்
அவனை அறிவுறுத்தி அனுப்பி வைத்தாள்.

''துயர் வந்தால் இராமனை விட்டு
அகல்வது தவிர்க ; அவன்
இருக்குமிடம்தான் அயோத்தி ;
சீதை உனக்கு இதுவரை அண்ணி ;
இனிமேல் அவள்தான் உனக்கு அன்னை.
களைகண்ணாக இருந்து அவனுக்காக
வில் ஏந்திச் செல்க'' என்று கூறினாள்.

**சீதையின் சீலம்**

செய்தி சீதைக்கு எட்டியது;
பட்டுத் துகில்கள் பெட்டிகளில் கிடந்தன ;
முரட்டுச் சேலை அவளுக்குத் தேவைப்பட்டது;

முதியவள் ஒருத்தி உதவிய நார்பட்டு
ஏதோ ஒரு துப்பட்டி அதை உடுத்திக்
கொண்டாள்.

சிம்மாசனம் ஏற இருந்தவள்
இமாசலம் புறப்படத் தயாரானாள்.
இராமன் தடுத்துப் பார்த்தான் ;
அவள் அடுத்து வந்து நின்றாள்.

''காட்டுக்குச் செல்வது என்பது
ஊட்டிக்குச் செல்லும் 'பிக்னிக்'
அல்ல ; கரடு முரடான வழி ;
கால் அணிகள் அவை காப்புத் தராது.

வீட்டில் தங்கி இரு ; மாமியர்
மூவர் உளர் ; கலகலப்புக்குக்
குறைவு இருக்காது ; சலசலப்பு
சிலசமயம் நேரலாம்'' என்றான்;
அதைக்கேட்டு
அவள் வெலவெலத்துப் போனாள்.

''கூட்டில் வளர்க்கும் கிளி
அது பதிவுத் தட்டு
உன் பேச்சை எதிர் ஒலிக்கும் ;
மறுப்புக் கூறாது'' என்றான்.

''ஏசியில் பழகிய உனக்குத்
தூசு படிந்த வெப்பம்,
வீசி அடிக்கும் காற்று
உடம்புக்கு ஒப்புக் கொள்ளாது ;
சூடு உனக்குத் தாங்காது ;
வீடு அதைவிட்டு விலகாதே'' என்றான்.

''பிரிவு அதைவிடவா அது கொடுமை ?
அந்தப் பெருங்காடு சுடும் ?''

என்று நறுக் கென்று கேட்டாள்.
அது சுருக்கென்று தைத்தது.
''மற்றொன்று ; இதையும் எண்ணிப்பார்.

''நான் இல்லாமல் உன்னால்
தனித்து இனித்து இருக்க முடியுமா ?
பூஜைகளுக்குத் துணையாக முனிவர்களுக்கு
மூத்த துணைவியர் தேவைப்படுகிறார்கள் ;
அவரவர் தம் பத்தினிகளோடுதான்
பவித்திரமும் கொண்டாடுகிறார்கள்.

துணை ஒருவனுக்கு இல்லை என்றால்
அவன் காட்டு மிராண்டி ஆகிவிடுவான்''
இந்தத் தத்துவங்களை அவள்

அடுக்கிக் கூறினாள் ; அதற்குமேல்
அவளை ஒடுக்கி வைக்க விரும்பவில்லை ;
அவளும் அவனுடன் புறப்பட்டாள்.

''நேற்று வாழ்ந்தவன் இன்று
இல்லை ; அதுதான் உலகியல்''
இது வள்ளுவர் வாக்கு.

அடிசுடும் காட்டுக்கு அடிவைக்கிறாள் ;
மக்கள் மனத்தை இது உலுக்கியது ;
துக்க தினம் என்று பள்ளிகள்
அவற்றை மூடி வைத்தனர்.

''நாடு கடத்தப்படுவது கொடுமை ;
கேடுகெட்ட ஆட்சி'' என்று
சாலைகளில் எழுதினர்.
நாடே அவலத்தில் ஆழ்ந்தது ;
அலுவலகங்கள்; கடைகள்; ஊர்திகள்
வேலைநிறுத்தம் செய்தனர் ; கதவுகள்
அடைத்தனர்

மூவரும் நடந்து சென்றனர் ;
இராமன் முன்னே சென்றான் ;
இடையில் சீதை நடந்தாள் ;
இலக்குவன் வில் ஏந்திப் பின் சென்றான்.

ஊர் எல்லைவரை மக்கள்
ஊர்வலமாகப் பின் சென்றனர் ;
கோஷம் எழுப்புவதற்குத்
தடை விதிக்கப்பட்டிருந்தது ;
அதனால் அது மவுன
ஊர்வலமாக அமைந்தது.

**கங்கையைக் கடத்தல்**

காட்டு புகப்பு ; அதுவரை
சுமந்திரன் தேரில் அவர்களைக்
கொண்டு வந்து சேர்த்தான் ;
பின் வந்தவர்க்கு விடை
தந்து சுமந்திரனைத் திருப்பி
அனுப்பினான் செய்தி சொல்ல

கங்கையைக் கடக்கப் படகு
தேவைப் பட்டது ; சுற்றும் முற்றும்
பார்த்தான் ; தூர இருந்த ஒரு
படகோட்டி வந்து சேர்ந்தான் ;

''நாவாய் ஓட்டும் பணியாளன்''
என்று குகன் தன்னை அறிமுகப்
படுத்திக் கொண்டான்.

புதியவர்கள் அரச மக்கள் ;
அவனுக்கு அவர்கள்பால்
கரையற்ற அன்பு தோன்றியது.

காளத்தி நாதரைக்
கண்ட கண்ணப்பன்

ஆயினான் ; அப்படி
ஒரு ஈர்ப்பு;

''நாவாய் வேடுவன் நான் ;
நாவு ஆர உண்ண
உணவு உண்க'' என்று
படைத்தான் தேனும் மீனும் ;

அங்கு மீன் நிற்கவில்லை ;
தேன் இனிக்க வில்லை ;
அவன் அன்பு அது
அமிழ்தமாக இருந்தது.

அவர்கள் சோகக் கதை
கேட்டான் ; அவன் அசோகன் ஆனான் ;
அவர்களுக்குச் சுகம் தர
விரும்பிப் பேசினான்.

''காடுமேடு திரிந்து
இந்தச் சிறிய பெண்ணை
அழைத்துக் கொண்டு
சீரழிவது ஏன் ?

எங்கள் ஊரில்
உண்ணத் தினை உண்டு ;
தின்னக் கனிகாய்
உண்டு ; நீந்தி விளையாட
நீர்நிலைகள் உண்டு ;

களித்து விளையாடக்
கவின் மிக்க சோலைகள்
உண்டு ; பிடித்து விளையாட அன்னப்
பறவைகள் திரியும் ;

மயில் தோகை விரித்து
ஆடுவது கண்டு ஈண்டு

மகிழ்வுடன் இருக்கலாம்'' என்றான்.
நிம்மதியாக உறங்கி உண்டு
இங்கு வாழலாம் ; இங்கே உங்களுக்கு
நாங்கள் துணை உண்டு'' என்றும்
கூறினான் ; நண்பன் ஆயினான்

''உண்டு தின்று மகிழ
யாம் குண்டோதரர்கள் அல்ல !
கண்டு பல தேயங்கள்
சுற்றி வர வாய்ப்புத் தேவை ;

தவசிகளின் நேயங்கள்
அவர்கள் கல்வி ஞானங்கள்
இவை எமக்குத் தேவை ;
அவர்களுக்குச் செய்யத்
தக்கது நாங்கள் சேவை'' என்றான்.

கங்கைக் கரையைக் கடந்து
நங்கை அவள் சீதையோடு
தம்பி இலக்குவன் துணையோடு
படகில் அமர்ந்து கரை கடந்து
சென்றான், மறுகரை சேர்ந்தனர்

சுகவாசம் பெற்றிருந்த அவர்கள்
வனவாசம் அடைந்தனர் ;
குகனின் சகவாசத்தோடு
அவர்கள் செல்லும் வழிவகையும்
அறிந்தவர் ஆயினர் ;

பரதநுவாசர் குடிலில்
தங்கிச் சற்று இளைப்பாறினர் ;
அவரை உபகாரியாக்கினர் ;
அவர் படைத்ததை இவர்கள்
படித்துப் பின் விடை பெற்றனர்.

**சித்திரகூடமலை**

அது அயோத்திக்கு அடுத்து
இல்லாமல் இருந்தது ;
குற்றாலத்து அருவிபோல்
அந்தப் பிரதேசம்
குளிர்வு தந்தது ;

இயற்கையின் எழில்
சூழ்ந்துள்ள பொழில் ;
அங்கே அமைத்தார்கள்
அழகான ஒரு குடில்.

அது அவர்கள்
தங்கும் நிழல்
ஆக அமைந்தது.

**பரதன் வருகை**

நாட்டு அரசன்
செத்துவிட்டான் என்ற
சத்து இல்லாத செய்தியைச்
செப்பாமல் தசரதன்
அழைக்கின்றான் என்ற
செய்தி சொல்லிப் பரதனை
அழைக்க வசிஷ்டர் ஆள் அனுப்பினார்.

அழைப்புக் கேட்டுக்
குழைந்த நெஞ்சோடு பரதன்
அயோத்தி நுழைந்தான் ;
கருப்புக் கொடிகள்
அவலத்தைத் தெரிவித்தன ;
தேசியக் கொடிகள்

தாழ்ந்து அரைக் கம்பத்தில் தொங்கிக்
கொண்டு இருந்தன.

**கைகேயிலயச் சந்தித்தல்**

அன்னை அவள் முன்
அறிதெய்வம் ; அவளை
வணங்கிச் செல்ல
அவள் அரண்மனை சென்றான் ;

சூடும் குளிர்ச்சியும் கலந்த
செய்திகள் அவனுக்குக் காத்துக்
கிடந்தன ; சூடான செய்தி
முதற் செய்தி ; அவன்
அன்னை அறிவித்தாள்.

''உன்னை அரசன்
ஆக்கினேன் ஆட்சி ஏற்க''
என்று அறிவிப்புச் செய்தாள்.

தாய் என்று காண வந்த
அவன்முன் பேய் அவள்
நின்றாள் ; பிதற்றினாள் ;

பாலூட்டி வளர்த்தவள்
இன்று நஞ்சு ஊட்டி
விட்டாள் ; குடிநீர்க்
குளத்தில் அவள்
கொட்டி விட்ட விஷத்தை

எடுத்து அகற்ற
இயலாது என்பதை
அறிந்தான் ; அலறினான்.

அலறித் துடித்தான்,
"ஆகாள் இவள்தாய்"
என்று கோசலையிடம்
ஓடிக் கரங்குவித்தான்;
சிரம் தாழ்த்தினான்.

அவன் மாசற்ற முகம்
ஏசு நாதர் போல் இருந்தது;
நல்ல மகன் அவன்..
அவனை அவள் அழுங்கச்
செய்ய விரும்பவில்லை
அவனோடு சேர்ந்து
அவள் கண்ணீர் வடித்தாள்.

தொடர் நிகழ்ச்சிகள்
அவனுக்கு ஒவ்வொன்றாக
உணர்த்தப் பட்டன.

ஈமக் கடன செய்ய
அவனுக்காகத் தசரதன்
சவமாகிக் காத்திருந்தான்;
அது எட்டாம் நாள்.

கொள்ளி போடப்
பிள்ளை வந்தான்;
தசரதன் சடலத்தை
விறகில் வைத்து நீட்டினர்.

"ஈமக் கடனுக்குப்
பரதன் ஆகான்" என்று
வசிட்டர் தடை செய்தார்.

செத்தவன் எழுதி வைத்த
உயிலில் பரதன் தன்
சடலத்தைத் தொடக்

கூடாது என்று எழுதி
வைத்துச் சென்றிருந்தான்.

அடுத்து வாரிசு
சத்துருக்கனன் என்பது
முடிவு ஆகியது.

யார் வைத்தாலும் அது
எரியக் காத்து இருந்தது ;
செத்த பிறகு அது உறவு
சுற்றம் எல்லாம்
பேதம் காண்பது இல்லை ;

பரதன் தொட்டால்
செத்தவன் எழுந்து விடுவான் ;
அதற்கு அஞ்சி
அவனை அனுமதிக்கவில்லை.

## இராமனைச் சந்தித்தல்

நடந்தது எல்லாம் இவன்
யோசித்துப் பார்ததான்
சட்டம் ஒரு இருட்டறை ;
அதில் அவன் வெளிச்சம்
காண முயற்சி செய்தான்.

இராமனை அழைத்து வருவது
என்று முடிவு செய்தான்.
வசிட்டரிடம் வாய்மொழி
கூறினான் ; அவர் ஏற்கவில்லை.

''மன்னன் சத்தியவிரதன்
அவன் கூற்றுகள் பொய்
ஆவது தரும விரோதம் ;
ஆட்சியை ஏற்க' என்றான்.

சாத்திரங்கள் சட்டங்கள்
சம்பிரதாயங்கள் இவை
வளர்ச்சிக்குச் சிலசமயம்
தடைக் கற்கள் ;
புதியது நினைத்தான்.

தனக்குத் தந்த
ஆட்சியைத் தமையனுக்குத்
தர அவனுக்கு உரிமை
இருந்தது ; அதை யாரும்
தடுத்து நிறுத்த இயலாது.

பரதன் விரதனாகக்
கோலம் கொண்டு மற்றொரு
இலக்குவனாக அவன் மாறினான்.

நாட்டுமக்கள் அவன்
பின் நின்றனர் ;
சேனைகளும் ஆட்களும்
கொடி பிடித்துப்
பின் தொடர்ந்தனர் ;
இராமன் ஏறிவரத்
தேரும் உடன் கொண்டு
சென்றான் ; கைகேயி
பேய் அறைந்தவள்
ஆகித் தனித்து நின்றாள் எனினும்
எந்தச் சலனமும் அவள் காட்டவில்லை

**குகனைச் சந்தித்தல்**

கொடிகளும் தேரும்
படைகளும் சூழ்ந்துவரத்
தளபதி போலப் பரதன்
வருகை குகனுக்கு
அச்சத்தை அளித்தது.

''காடு சென்றவனை அவர்கள்
அடித்துப் பிடித்து
அக்கிரமம் செய்யப்
படை எடுத்து வந்தார்கள்''
என்று முதலில் நினைத்தான்;

பரதனைக் குகன் தேடினான்;
அங்கு இராமனே இருந்தான்.
மாசு அடைந்த மேனி ;
தூசு படிந்த ஆடை ;
சிந்தனையோடு இயைந்த
நிந்தனையற்ற முகம்
அவன் அங்குக் கண்டான்.

கையில் இருந்த குகன் வில்
பரதன் காலில் விழுந்தது ;
''பின் பிறந்தவர் இராமனுக்குப்
பிழை இழைக்க மாட்டார்கள்''
என்று முடிவுக்கு வந்தான் ;
இருவரும் உள்ளம் இயைந்து
கள்ளம் தவிர்ந்து கலந்து உரையாடினர்.

''இராமன் எங்கே தங்கினான் ?
எந்தப் புல்தரை அவனைப்
புல்லரிக்க வைத்தது ? எந்த
இடத்தில் உறங்கினான் ? தம்பி
எங்கு இருந்தான் ?'' இது போன்ற
வினாக்களை எடுத்துவிட்டான் :

குகன் ; நினைவில் ஒரு காட்சி
சித்திரமாக நிலைத்து இருந்தது.

''கருப்பு நிறத்து அழகன்
அவளோடு விருப்புற்று உறங்கினான் ;
காவல் நின்று காத்து இருந்தான்

இளையவன் ; பாவம் அவனைப்
பார்க்கப் பரிதாபமாக
இருந்தது ; பெருமூச்சு விட்டான்;
அதற்குப் பொருள் அது தானா ?

இல்லை ; இராமனின் அவல நிலை
அவனை பாதித்து வருத்தியது''
என்று ஒரு நிகழ்ச்சி உரைத்தான்.
''அவன் துயர் துடைக்க
நின்றான் ; அதைப் படைக்க
நான் நின்றேன்''
என்றான் பரதன் ; வருந்தினான்.

கங்கைக் கரையைக்
கடக்கப் படகுகள் நின்றன ;
உடன் வந்த தாயரை
அவற்றில் ஏற்றினான்.

காற்றின் அசைவுக்கு அவை
இசைவு தந்தன ; துடுப்புக்
கொண்டு அவற்றைத் துரிதப்படுத்தினர்.

''தாயர் மூவர்
அவர்களுள் யாவர்
இராமனுக்குத் தாயார்''
என்று அறிய விரும்பினான் ;

அவன் மெல்லப் பேச்சுக்
கொடுத்தான், அவர்கள்
அறிமுகம் கேட்டான்.

இராமனைப் பெற்றதால்
பெருமை பெற்றவள்
தான் பிறந்ததால்
சிறுமை உற்றாள்

என்று கோசலையை
அறிமுகம் செய்தான்.

இராமனுக்குத் துணையாகப்
பணி செய்யும் பெருமையை
இலக்குவன் பெற்றான் ;
அவன் தாய் சுமத்திரை என்று உறவு சுட்டிக்
காட்டி விளக்கம் தந்தான் ;

கைகேயியைப் பற்றி
அவன் கூறியது
கடுமையாக இருந்தது ;

''கொடுமையின் இருப்பிடம் ;
இவள் குடலில் தான்
நான் கிடந்து எழுந்தேன்.

''வெட்கப் படுகிறேன் ; வேதனைப்
படுகிறேன் ; இந்த இடர்களுக்கு
எல்லாம் இவள்தான் காரணம் ;
இவள் எந்தச் சலனமும்
இல்லாத ஆழ்கடல்'' என்றான்.

''இவள் உனக்குத் தாய்''
என்று நாகரிகமாகக்
கூறினான் குகன் ; அவளைக்
கையெடுத்துக் கும்பிட்டான் ;

அவள் தவறு செய்திலள்
என்பது அவன் கூப்பிய
கரம் குறிப்பாக அறிவித்தது ;
இராமனைச் சந்தித்து
பரதன் அறிவித்த முதற்

செய்தி ''தசரதன் இறந்தான்''
என்பது ; அவனுக்கு அது
ஆறாத் துயரத்தைத் தந்தது ;

தண்ணீர் தேடிச் சென்று
முழுகி எழுந்து தந்தைக்கு
ஒரு முழுக்குப் போட்டான் ;
வருத்தம் தெரிவித்தான்.

அடுத்த நிகழ்ச்சி
நிரலுக்கு வந்து சேர்ந்தான் ;
இராமன் மறுத்துவிட்டான் ;
''ஆட்சியைப் பெறலாம் ;
மீட்சி இயலாது'' என்றான்.

சட்டத்தின் சிக்கலைத் தம்பி
தீர்த்தான் ; அதில் உள்ள முடிச்சியை
இருவராலும் அவிழ்க்க முடியவில்லை ;

அந்த முடிச்சு கூனி போட்டது ;
இது தெரிந்துதான் அவள்
இரண்டாவது வரத்தையும் கேட்டு
வைத்தாள் ; அதற்கு விளக்கம
இங்கேதான் கிடைக்கிறது.

பரதன் தலைநகருக்குச் சென்றான் ;
பேச்சு வார்த்தை நடத்தினான் ;
முறிந்து விட்டது ; ஆனால்
வெறுங்கையனாய்த் திரும்பவில்லை ;

முடியில் கை வைத்தான்:
அது படியவில்லை ; அவன்
அடிக்கு வழி வைத்தான் ;
பாதுகையைக் கேட்டுப்

பெற்றான் ; அதனைத் தலைமீது
சுமந்து சென்றான்.

''நடப்பதற்கு உதவிய பாதுகை
அதையும் அவன் பெற்றுக்
கொண்டான் ; வெறும் கால்நடைதான்''
இப்படியும் ஒரு சிலர்
குதர்க்கம் பேசுவர் ;
பேசுவார் பேசட்டும் ;
அது நாடக நகைச்சுவை.

பாதுகைக்குச் சிம்மாசனம்
என்று புதுவது செய்தான் ;
நகருக்குச் சென்று ஆட்சி
நடத்த அவன் இசையவில்லை ;
நந்தியம் கிராமம்
அது புறநகர் ; ஊரின் எல்லை.

அங்கிருந்து இராமனுக்கு பதிலாக
அவன் பெயரில் ஆட்சியை நடத்தச்
சம்மதித்தான் ; புறப்பட்டுப் போயினான் ;
அந்த ஆட்சிக்கு அவன் தந்த பெயர்
இராமராச்சியம் ; இவன்

வெறும் பூச்சியம் ; அங்கே
அவன் தினமும் இராமநாம
வழிபாடு செய்து கொண்டு காலம் நடத்தினான்.

## 3 ஆரணிய காண்டம்

சித்திர கூடம் அவனுக்கு
ஒத்து வரவில்லை ; நகரத்து மாந்தர்
அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை ;

சீர்வரிசையில் இராமன் திருக்காட்சிக்கு
வந்து குவிந்தனர்.

பஞ்சவடிக்குச் செல்வது
என்று முடிவு செய்தனர் ;
அடுத்த இடம் பஞ்சவடி;
சற்றுத் தெற்கே அது இருந்தது.

அங்கே இலக்குவன்
அவர்கள் தங்கிக் கொள்ள
மூங்கில் குடிசை ஒன்று
கட்டிச் சமைத்தான் ;

அதைப் பன்னக சாலை என்றனர்.
அதற்கு முன் வழியில் அவர்கள்
அகத்தியனைச் சந்தித்தனர் ;
தமிழ் கற்ற சான்றோன் ; அதனால்
அவனை மதித்துப் போற்றினர்.

சடாயு என்ற பெயருடைய
கழுகின் வேந்தனைச் சந்தித்தனர் ;
அவன் தசரதனின் நண்பன் ;
இழவு கேட்டு அழுது முடித்தான் ;
ஆறுதல் கூறி அவனை விட்டு அகன்றனர்.

**வஞ்சமகள் வந்தாள்**

சூர்ப்பனகை அவள் பருவ
மங்கை ; இராமன் உருவில்
மயங்கினாள் ; அவனை
அடைய அவள் ஆசை அரும்பியது ;

அழகு சாதனம் ; நிறுவனம்;
சேவா சாதனம் போன்றது ;

அவள் அங்குச் சென்று
ஒப்பனை செய்து கொண்டு
அவள் கவர்ச்சி ஆயினாள் ;

நாட்டியக்காரி ஒருத்தி
அந்தக காட்டு வாழ்க்கையில்
இராமனால் காண முடிந்தது ;
அவனுககு அது ஒரு மாறுதல்.

இந்த சொகுசுக்காரி
இராமனிடம் சரசம் ஆடினாள் ;
மசமசப்பு ; அதனால்
பசபசத்தாள் ;
அது பிசுபிசுத்தது.

அவன் அவளை அசட்டை
செய்தான் ; காரணம்
அவனுக்குத் தன் மனைவியைத்
தவிர மற்றவர்கள் தங்கைமார்கள் ;
அது அவனுடைய கவித்துவம்.

கலியாணமாகாத கட்டை
என்று அவனைக் கருதினாள் ;
சிகரெட்டு பற்ற வைக்க
இன்று ஸ்விட்ச் வசதி இருக்கிறது ;
பஞ்சு என்று அவனை நினைத்தாள் ;

அவனை எரிக்க முடியும் என்று
வெறித்தனம் அவனிடம் காட்டினாள் ;
மினுக்காக அவள் சிலுசிலுத்தாள் ;
தளுக்காக அவளிடம் இருந்து அகன்று
விட்டான்,

பக்கத்தில் மஞ்சு என ஒரு
பெண் பிஞ்சு நின்று இருந்தாள் ;
அஞ்சி அந்த இடத்தை விட்டு
அகன்றாள் ; போட்டிக்கு வந்த
மற்றொரு பேட்டை அழகி
என அவளை வெறுத்தாள்;

அவளும் தன்னைப் போல் அங்கு
அவனை வளைத்துப் போட
வந்த ‘சிந்து’ என்று நினைத்தாள் ;
அவள் ‘பைரவி’ என்பது
அவளுக்குத் தெரியாது

‘‘இந்தச் சிறுக்கி அங்கு
இருக்கும்வரை அந்தக்
கிறுக்கன் தன்னிடம்
கிறக்கம் கொள்ளமாட்டான்’’
என்று அவள் நினைக்கத் தொடங்கினாள்.

அவளைத் தட்டிச் செல்வது
என்று முடிவு செய்து
அவள் கைதொட்டு இழுத்தாள் ;

தூக்கித் தோள்மீது போட்டுக்
கொண்டு தூர எறிய
நினைத்தாள் ; சீதை பதை
பதைத்தாள் ; அதைக் கவனித்துப்
பார்த்திருந்த காத்தவ
ராயன்; காகுத்தன் தம்பி

அவளைச் சிரம் பற்றிப் பிடித்தான் ;
செவியையும் மூக்கையும்

அறுத்தான் ; அவளைச் செறுத்தான்;
மூக்கும் செவியும் சிதைந்து முக
அழகைக் கெடுத்தன; அவள்
யாக்கையில் இருந்து

இரத்தம் கொட்டியது ; அவள்
சத்தம் போட்டாள் ;
இழப்புக்கு ஈடு கேட்டாள்.
நுகர்வோர் மன்றத்துக்குச்
செல்வதாக மருட்டிப் பார்த்தாள்.

''மூக்கும் செவியும் போனால்
என்ன? யாக்கை உளது; தன்
பெண்மையைத் தாக்கவில்லை; இது
அவள் வாதம் ; பிடிவாதம் செய்தாள் ;

இலக்குவன் தனியன் ;
கண்ணுக்கு இனியன் ;
தறுக்கன்; முறுக்கன் ;
அவனை ஈடு கேட்டாள் இந்தக்
கேடு கெட்ட கயத்தி.

ஓட்டினால் அன்றி இவள
குற்ற வழக்குகள் போல்
விடமாட்டாள் என்று
அவளை விரட்டி அடித்தான்.

அவள் வறட்டுக் கூச்சல்
அவள் உறவுக்காரரை இழுத்தது ;
கரன் இராவணன் ஒன்று
விட்ட தம்பி; அங்கு
அவனுக்குத் துணை அரசு பதவி
தரப்பட்டு இருந்தது ;

குரல் கேட்டு அவன் அங்குக்
குதித்துப் படையோடு வந்தான் ;
வறுத்த கடலை போல் அவனை
வறுத்து எடுத்து முடித்து விட்டனர்.

**இராவணனிடம் முறையீடு**

'ராகிங்க்' செய்ததால்
படிப்பை விட்டு விட்டு
வீட்டுக்கு 'வாக்கிங்க்'
செய்யும் மாணவியரைப்
போல இவள் படிப்பு
வேண்டாம் என்று சொல்லி
வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

காது அறுந்து விட்டதே கம்மல்
எப்படிப் போட முடியும் ?
அதை நினைத்து விம்மி விம்மி அழுதாள் ;
மூக்கை அவள் தொட்டுப் பார்த்தாள் ;
அது இடம் பெயர்ந்து விட்டது ;
அறுவைப் பெண் ஆகிவிட்டோம்
என்று அவள் தன் மழுங்கிய முகத்தைத் தடவிக்
கொண்டாள்.

''இராவணனின் ஒரே தங்கை
அங்கபங்கம் செய்து எவனோ
அநியாயப் படுத்தி விட்டான்''
என்று ஆரோகணம் செய்தனர்
இசைவல்ல வேளாளர்கள் ;
பெரியவர்கள் பரிதாபப்பட்டார்கள்.

கல்லூரிப் படிப்பில்
காதல் கலவரம்;

''அந்த மாணவன் யார்?
அவன் எதைத் தொட்டான் ?
எப்படிக் கெட்டாள் ? அதைச்
செப்படி'' என்று கேட்டான்.

அவள் காதற் கதை
ஒன்று கதைப்பாள்
என்று காது கொடுத்தான்,

அவள் அவனைத் தூண்டிவிட
நினைத்தாள் ; சீண்டினாள் ;

கையில் மகளிர் இதழ்
வைத்திருந்தாள்; அதில் மையப்படம்
பேரழகி ஒருத்தியின் வண்ணப்படம்.

பேரழகி தேர்வு இன்று பிரச்சினை ஆகிவிட்டது;
மேற்கும் கிழக்கும் மோதுகின்றன; எது
வெல்கிறது '
பொறுத்திருந்து பார்ப்போம்.

சீரை உடுத்திய சீதையின்
பேரழகைச் சித்திரித்தாள் தங்கை ;
தங்கை இவள் அழகையை
மறந்தான் ; மற்றவள் அழகை நினைந்தான்;
தங்கை அவள் நின்ற இடத்தில்
நங்கை சீதை மாறி நின்றாள் ;
சூர்ப்பனகை உருமாற்றம் பெற்றாள்.
மேலும் அவன் தொடர்ந்து கேட்டான்;
அவள் யார் ; உயரம் ? அகலம் ?
தோற்றம் அழகு
இவற்றிற்கு உவமைகள்
அவளிடம் எதிர்பார்த்தான்.

சென்ற விவரம்; நடந்த கலவரம்
கூறும்படி ஆரவாரம் இன்றிக் கேட்டான்.
''பக்கத்தில் இரண்டு காளையர்
இருந்தனர் ; இல்லாவிட்டால்
கக்கத்தில் அவளை வைத்து
இழுத்து வந்திருப்பேன்''
என்று ஆசையைக் கிள்ளிவிட்டாள்.

பிறகு தங்கை என்ன
ஆனாள் ; அவள் மருத்துவ
மனையில் சேர்க்கப்பட்டாள்.
பிளாஸ்டிக் அறுவை நடந்தது ;
அவளை அவன் மறந்துவிட்டான்.
மூட்டி விட்டு எரி எழுப்பிச் சென்றாள்.

**மாரீசன்வதை**

சீதையை அடைவது எப்படி ?
மானிடர் இருவர்
அவர்களுக்கு மாஇடர்
செய்தால் அவள் உடன்
உயிர் விடல் உறுதி;

போர் செய்வது பயன்
இல்லை ; விளைவு
அவள் உடன் கட்டை.

''காவலை விட்டு நீக்கி
அவளைத் தனிமைப் படுத்தி
ஏவல் கொள்வதுதான் தன்
ஆவல் தீர வழி''
என்று ஆழ்ந்து சிந்தித்தான்.

மாரீசனை அழைத்தான் ;
''பொன்மான் அதில் மயங்கிப்
பின் செல்வாள் ;
அதைப் பிடித்துத் தரச்
சொல்லி அவர்களைப்
பின்னி விடுவாள் ; நீ
இது செய்தால் போதும்''
என்று கூறி அவனைப் பணித்தான்.

மானை அவன் ஏவச்
சொன்னான்; அதுதான் உண்மை.
அவனே மானாக உருவெடுத்தான்
என்பது கதைக்கு வேண்டிய
பொய்மை ; அது கதை உத்தி ;

தாடகை வதத்தில் இவன்
இடையிட்டுத் தப்பியது
அவன் செய்த நன்மை ;
அம்பின் வேகத்தை
அன்று அவன் கண்டறிந்தவன்.

எப்படியும் சாவு ;
மான்பின் சென்றாலும்
மரணம் ; இங்கு
இராவணனின் ஏவல்
மறுத்தாலும் மரணம்.

நச்சுப் பொய்கையில்
நலிந்து கிடக்கும்
மச்சம் அது அங்கிருந்தாலும்
அழிவு ; கரையில் எடுத்துப்
போட்டாலும் கழிவு.

''சரி அவன் சொன்னதைச்
செய்து அவனுக்காகச் சாவது ; செஞ்
சோற்றுக் கடன் என்பர் அதனை.
உப்பு இட்டவன் அதனால் அவன்
தப்புச் செய்தாலும் இவன்
ஒப்புக் கொள்ள வேண்டியது
தான். வேறு வழி இல்லை;
மான்பின் இவன் சென்றான் ;
மானிடர் அவர்கள் என்ன செய்தார் ?

பெண்கள் பிடிவாதம்
பிடிப்பர் ; முடக்குவாதம் அவர்களுக்கு.
நகை கேட்டு அவள்
நச்சரிக்கவில்லை ; அது அவளுக்குச்
சிறிது நேர வேடிக்கை ; கேளிக்கை ;
அந்த மானைப் பிடிப்பதால்
வரும் உவகை:அவன் இசைந்தான்.

தம்பி திருத்தப் பார்த்தான்:
எச்சரிக்கை விடுவித்தான்:
''வட்டி முப்பது சதம் என்றால்
அது ஏமாற்றம் ; மோசம் போக
வேண்டியதுதான் ; அதுவல்ல விவேகம் ;
பொன் நிறத்தில் ஒரு
மான் இருக்கிறது என்றால்
அது நமக்கு ஆகாது ; சூதுதான் ;
மான்களுக்குப் புள்ளி
உண்டு ; அது துள்ளி'
ஓடும்; இது களவு மான்'' என்றான்.

காதல் என்பது அதன் காது
மூக்கு இவற்றை இலக்குவன் அறியாதவன்

கட்டிக் கொண்டானே தவிர
அவள் எங்கே இவனோடு
வந்து குலவி வாழ்ந்தாள்;
இவனை
ஊர்மிளை

எதுவும் கேட்டவள் இல்லை.
இந்தக் கொஞ்சல்களை
அவன் தன் மஞ்சத்தில்
அறிந்தது இல்லை.

இராமன் சென்றான்;
தொடர்ந்தான்; அது அவனுக்கு
ஆட்டம் காட்டியது ;
ஓட்டம் பிடித்தது.

வெகு தூரம் அவனை
விலக்கி விட்டு அவன்
அம்புக்கு அது
இலக்கு ஆகிச் சாய்ந்தது.

உடன் சென்ற மாரீசன் குரல்
கொடுத்தான் ;'' இலக்குவா இங்கே வா !
என்று திக்குவாய்க் குரலில்
கூவி அழைத்தான் ;
அம்பு பட்டு அவன் சுருண்டான்.

தம்பி அழைப்பை நம்பவில்லை ;
இராமன் தோற்றது இல்லை ; அவன்
உயிருக்கு உற்றது இல்லை.
சீதையைத் தனித்துவிட்டுச்
செல்ல அவன் விரும்பவில்லை ;

அவள் அவனைப் புரிந்து
கொள்ள இயலவில்லை.
அற்பத்தனமாகச் சொல்லாடினாள் ;
அவனை ''அங்கு நிற்க. தே''
என்று சொற் குவிததாள்.
வேறு வழி இல்லை.

அவன் கோடு ஒன்று
கிழித்து வைத்து அதைக்
கடக்க வேண்டாம் என்று
கூறியதாகக் கதை.

எல்லை என்று வகுத்துவிட்டால்
யாரும் அதைத் தாண்டியது
இல்லை ; அது மாபெரும் குற்றம் ;
அதற்காக ஓர் எல்லையை
வகுத்து விட்டு அவன் நீங்கினான்.
பிறர் இல் கடப்பது களவு ;
அதனால் இராவணன
தயங்கினான் ; வெளியே நின்றான்.

காவல் இல்லை ; கூர்க்கா
இல்லை ; இஜட் பிரிவு
துப்பாக்கி ஏந்திகள் இல்லை ;

துர்பாக்கியவதி
அவளைத் தூக்கிச்
செல்ல அரக்க
இயல்பினன் அங்கு வந்து
நின்றான்; அவன் பசுத்
தோல் போர்த்து இருந்தான்.

காவி உடை என்றாலே
இந்த நாட்டு மக்கள் ஆவி
விடுவர் ; அவர்களை அவாவித்
தெய்வம் என்று பூசிக்கின்றனர்.

போலிகள் பலர் இன்று
வெளிச்சம் போட்டுக் காட்டப்
படுகிறார்கள் ; இந்த ஆசாமிகளை
இன்று மக்கள் புரிந்து வருகின்றனர்.

நீதி மன்றங்களில் நிறுத்தப்பட்டு உள்ளனர்.
இவர்கள் மீது எத்தனை வழக்குகள் !
வெட்கம் ; வேதனையும் கூட ;

இச்சையை மறைத்துக் கொண்டு
பிச்சை கேட்டு அவன்
கானம் பாடினான் ;
ஞானம் இழந்து அவள்
தானம் ஏந்தி அவன்முன்
வந்தாள் ; எல்லைக்கோடு தாண்டித்
தொல்லைக்கு உட்பட்டாள் ;

ஹெலிகாப்டர் ஒன்று அங்கு
அவன் வைத்திருந்தான் ;
''அவள் தொட்டால்
துவண்டு விடுவாள்.

கெட்டாள் என்ற பெயர்
வந்தால் அது கேடாக
முடியும்'' என்று அவளை
மண்ணோடு அகழ்ந்து
விண்ணோடு சென்றான்
என்பது அழகான புனைவு.

ஆற்றலை மிகுதிபடுத்திக்
கூறக் கூட்டிய கற்பனை இது ;
அவளை அவன் வலிந்து
இழுத்துச் சென்றான்; விவரம்
தெரியாது ; விரைவில் சென்றான்.

திருவிழாவுக்கு அழைத்துச்
சென்ற சிறு குழந்தை ; பெற்றோர்
அகன்று சென்றனர் ; அவ்வளவுதான் ;
அங்கே காணப்படவில்லை.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் நடந்தது இது.
கட்டிய குடிசை இருந்தது ;
இராமன் தாலி கட்டிய
தாரம் அங்கு இல்லை.

இராமன் அடைந்த துயரம்
அதற்கு அளவே இல்லை ;
அதை எழுதி நீட்டினால்
அது பழைய கவிதை யாகும் ;
ஒப்பாரி என்று சொன்னால் தப்பு ஆகாது.

அங்கு வேறு யாரும்
காவல் இல்லையா என்று
கேட்பது நியாயந்தான்;

சடாயு அங்குச்
சுற்றி வட்டமிட்டுக்
கொண்டிருந்தான் ;
அவன் தடுத்துப் பார்த்தான் ;
அவன் இறகை ஒடித்துப்
போட்டான் ; உயிருக்கு
அங்கு அவன் துடித்துக் கிடந்தான்.

இவர்கள் மட்டும் அந்த நடுக்காட்டில்
என்ன செய்ய முடியும் ?
காணாமல் போய் விட்டாள்
என்று கருப்பான ஒரு படத்தை
வெளுப்பான ஒரு திரையில்
காட்டினால் அது அலுப்பாகத்தான் முடியும்.

கால்கடுக்க நடந்து
கரடு முரடான இடங்களைக்
கடந்து நான்கு பக்கமும்
தேடித் திரிந்து அலைந்தனர் ;
மனம் குலைந்து நின்றனர்.

அந்தக் காட்டுவழியில்
இறகு ஒடிந்த பறவை
கழுகின் வேந்தன்
சடாயு ; இராவணனால்
தாக்கப்பட்டு விழுந்து
கிடந்தான் ; வண்டி மேலே
ஏற்றிவிட்டு வழியில்
கிடத்தும் பாதசாரியாக
அந்தப் பறவை இருந்தது.

வந்தவன் யார் ?
தெரிந்து சொன்னான் ;
ஒரு பெண்ணைக் கடத்திச்
செல்ல அது சீதை என்பதை

அவன் அறிந்ததைக்
கூறினான் ; அவர்கள்
சென்ற திக்கு
தெற்கு என்று கை காட்டிவிட்டு
அவன் புறங்காட்டை
அடைந்தான் ; கடத்தியவன்

இராவணன் என்பதையும்
தெரிவித்து மறைந்தான்.

அவனை எடுத்துப்
புதைத்து விட்டுச்
சமாதி கட்டி அவன்
சரித்திரத்தையும் அதில்
எழுதிப் பொறித்தனர்.

தெற்கே சென்றவன்
இராவணன் என்ற
செய்தி அறிந்து
அவளைத் தேடத்
தொடங்கினர் இருவரும்.

தனி மனிதர் யாரும்
தனித்துச் செயல்பட்டு
எதிலும் வெற்றி பெற
முடியாது ; தோல்விதான்
மிஞ்சும் என்பது அறிந்தது.

கட்சிகளே கூடத்
தேடும்போது இவர்கள்
தனிமனிதர்கள் !
எப்படி இவர்களால்
சாதிக்க முடியும் ?

யாரோடு கூட்டுச்
சேர்வது ? கடைசி
நேரம் வரை சிலசமயம்
தெரிவது இல்லை ;

அவசரக் கூட்டு
அபசுரம் ஆகிவிடுகிறது.

''சுக்ரீவனோடு கூட்டு
வைத்தால் சுலபமாக முடிக்க
இயலும்'' என்று வழிப் போக்கன்
கவந்தன் என்பான் இவர்களோடு
கலந்து உரையாடிச் செல்லும்
வழியையும் உரைத்தான் தெளிவுபட.

சபரி என்பாள் ஒரு
முது நரை ஆட்டி
அவளும் அவனை வழிபட்டு
வழி காட்டி விட்டுப்
பின் வானுலகு அடைந்தாள்.

## 4 கிட்கிந்தா காண்டம்

எண்ணிப் பார்த்தான் ;
''கண்ணியது முடிக்க இந்தக்
குரங்குப் படைகள் தேவை ;
சரியான யோசனை''
என்று அவனுக்குப் பட்டது.

'சிறு துரும்பும் பல்லுக்கு
உதவும்' ; 'கரும்பு தின்னவும்
சிலசமயம் கூலி தேவை'
'எதற்கும் முயற்சி இல்லாமல்
முன்னேற முடியாது'
பழமொழிகளை அடுக்கிக்
கொண்டே போகலாம் ;
'சிற்றெலியும் சிங்கத்துக்கு உதவ முடியும்'.

ருசிய முகம் என்னும்
பருவத உச்சியில் பதுங்கிக்

கிடக்கின்றன மலைக்குரங்குகள்
என்ற செய்தி கேட்டு அறிந்தான்.

குரங்கு புத்தி எப்படி
இருக்குமோ சொல்ல
முடியாது; பொறுத்திருந்து
பார்த்தனர்; குரங்குகள்
வெளிப்பட அஞ்சினர்.

உண்டை வில்லால்
உருட்டுக் கல் கொண்டு
மண்டை பிளக்கும் சிறுவர்களை
இந்தக் குரங்குகள்
கண்டு இருக்கின்றன.

கையில் ஏந்திக் காளையர்
இருவர் அண்ணாந்து பார்த்து
அவாவி நின்றனர்.

உள்ளூர் அரசுக்காரர்கள்
அடிக்கடி வந்து பொய்
வழக்குகள் போட்டு உள்ளே
தள்ளுவது உண்டு;

சாராய வழக்கில்
சமத்தியாப் போட்டுச்
சாத்துவதும் உண்டு;

வாலி சுக்கிரிவனின்
அண்ணன்; அவன் அடிக்கடி
வந்து இவனைக் குளிப்பாட்டிவிட்டுப்
போவது உண்டு; அவன்

ஏவிய ஆட்களோ இவர்கள் ?
என்று அஞ்சி ஒதுங்கினர்'

பார்த்தால் இவர்கள் நல்ல
பிள்ளைகளாய் இருக்கின்றனர்.
நெற்றியில் மூன்றாவது கண் ;
நெற்றிப் பொட்டு ; நேமநிட்டை ;
காவி நிற வேட்டி ;
மடத்துச் சீடர்கள் ;
பயப்படத் தேவை இல்லை.
தைரியம் வந்தது.

குரங்குகளுள் ஒரு படித்த இளைஞன்
சகல கலைகளையும் கல்லாமல்
கற்றவன்; பட்டி தொட்டிப் பேச்சாளி;
'சொல்லின் செல்வன்'
என்றும் சிறப்பித்துச் சொல்வர்.

அனுமன்; அவன் வேகமாகத்
தாவுவான்; அதனால்
அவனைக் காற்றின் மைந்தன்
என்று செல்லப் பெயர் வைத்திருந்தனர்,

அஞ்சனை என்பது அவன்
தாயின் பெயர்; அந்தக்
காலத்தில் தந்தையின் பெயர்
சிலருக்குத் தெரிவது இல்லை;
அவன் தன்னை
அஞ்சனை மைந்தன்
என்று கூறிக் கொண்டான்,

எட்டி இருந்து இந்த
இருவரைப் பார்த்தான்;
அவர்கள் தம்மைப் பிடிக்க

வந்தவர் என்று அஞ்சினான்;
தன்னை வைத்து ஆட்டிப்
பிழைக்க அவர்கள்
கூத்தாடிகள் அல்ல
என்பதை அறிந்தான்.

கையில் வில் இருந்தது;
வீரர்கள் இவர்கள்
என்பது அறிந்து வைத்தான்;
வழி தவறி அங்கு
வந்த வாலிபர்கள் ;
அவர்களுக்கு வழி காட்டலாம்
என்று அவர்கள்
விழியில் அவன் பட்டான்,

கையில் அவர்கள் சீட்டு
ஒன்று வைததிருந்தார்கள்;
அதில் பின் கோடு
உட்பட வட்டம்
மாவட்டம் தெரு
எல்லாம் எழுதி இருந்தன.

வீட்டு எண் தெரியாமல்
வீதி வீதியாக அலைந்து
கொண்டிருந்தார்கள்
என்பது தெரிந்தது அவனுக்கு.

''சுக்கிரீவனா ?
அவர் என் எசமானர் ;
வந்த செய்தி யாது?

பார்த்தால் பறி கொடுத்தவர்
போல் நீங்கள் நிற்கிறீர்கள்''

என்று குறிப்பறிந்து
பேசினான்! அவன்
பொறுப் பறிந்தவனாக
இருந்தான் என்பது தெரிந்தது.

மாடு ஒன்று தவறி விட்டது.
அதை யாரோ இழுத்துச் சென்றுவிட்டனர்;
இந்தச் செய்தியைக் கூறுவது போல்
மனைவி அவளை ஒருவன்
இழுத்துச் சென்று விட்டான்
என்று வாய்விட்டுக் கூறினார்கள்.

''எங்க அய்யா கதியும்
அவ்வளவுதான் ; காலம்
கெட்டுவிட்டது ! மனைவிகளை
ஜாக்பாட் செய்யும்

ராக்கட்டுகள் பெருகிவிட்டன;
நீங்கள் இருங்கள்; எம்
தலைவரை அழைத்து வருகிறேன்'
என்று சொல்லி விட்டுப்
போனான்; பாய்ந்தான்.

''வந்தவர்கள் போலீசு
அல்ல காவி சட்டை ;
காக்கிச் சட்டை அல்ல''
என்று சுக்கீரிவனிடம்
செய்தி கூறினான்.

வாலிக்கு அஞ்சி அங்கு
அவன் பதுங்கிக் கொண்டான் ;
அதனால் அவன் முதலில்
தயக்கம் காட்டினான்;

மயக்கம் தீர்ந்தது ;
வந்தது அஞ்சல்வழிக் கல்வி தபால் ;
அரசமகன் என்பதை அறிந்தான்.
கையில் தடி ; அதனால்
அவன் தண்டல்காரன்
ஆகி விட முடியாது.

வில் எடுத்தவன் எல்லாம்
வீரன் என்று மதிப்பிட
முடியாது ; அவனுக்குச் சுக்கிரீவன் ஒரு
தேர்வு வைக்க விரும்பினான்.

அதை வெளிப்படையாக அவனிடம்
அவன் தெரிவிக்கவில்லை ;
அனுமன் மூலம் அதை
அறிவித்து வைத்தான்.

மரா மரங்கள் ஏழு
அங்கு ஒரு நேராக
இருந்தன ; அவற்றை
ஒரே அம்பால் வீழ்த்த
வேண்டும் ; அது அம்பின்
சாதனை என்று அறிவித்துச்
சோதனை வைத்தான்.

அதாவது ஆற்றல் மிக்கவன்
என்பதைக் காட்ட
இந்தக் குட்டிக் கதை
கூறப்படுகிறது ;

அவன் அம்பினைவிட்டு
மரங்கள் ஏழினையும்
சாய்த்துவிட்டான்.

சுக்கிரீவன் அவனும் ஒரு
அரசன் ; இராமனும் வேந்தன்
மகன் ; இருவரும் ஓர்
உடன்படிக்கை செய்து

கொண்டனர் ; மனைவியரை
மீட்பது அவர்கள்
கூட்டுக் கோட்பாடு.

கொள்கை அடிப்படையில்
கூட் டு அமைந்தது ;
வாலி சுக்கீரிவனின்
மூத்தவன் ; வலிமை
மிக்கவன் ; இருவருக்கும்
மனஸ்தாபம் ; ஒருவரை
ஒருவர் அடித்துக் கொண்டனர்.

குரங்குப் பிடியில் இருந்து
மீட்பது என்பது அரிய
செயல் ; அதற்கு இராமன்
உதவி தேவைப்பட்டது.

வாலியின் ஆட்சியையும்
அவனைக் கொன்று இவன்
கையில் ஒப்புவிக்க
உடன்பாடு செய்து கொண்டான்.

இருவர் தம் உறவும் இறுகியது ;
எப்படி வாலியை வெல்வது ?
பலபடி அவனிடம் அடிதடி
நடந்து மிதியடி பட்டவன்,
அதனால் அவனை எதிர்க்க
அஞ்சினான் ; தயங்கினான் ; சின்னவன்

இடையில் இலக்குவன் ஒரு
வினாவை எழுப்பினான் ;
அண்ணனைக் கொல்ல எதிர்க்கும்
அநியாயக் காரனை எப்படி
நாம் ஏற்பது என்பது அவன் வினா ;
தான் சிறந்த தம்பி என்ற
அகம்பாவம் அந்த வினாவில் அமைந்திருந்தது.

''தம்பியர் எல்லாம் பரதன் ஆகி
விட்டால் பிறகு பரதனுக்கு மதிப்பு
ஏது ?'' பரதனை உயர்த்திப் பேசினான் ;
மூக்குஉடைபட்டது ; இரத்தம் கசிந்தது ;
துடைத்துக் கொண்டான்; அதுமுதல்
தற்பெருமை தோன்றப் பேசுவதற்குத்
தாழ்ப்பாள் இட்டுக் கொண்டான்;

சுக்கிரீவன் மனைவி
உருமை என்பாள்
அவர் வாலி விரும்பிய
உருப்படி ; அவள் அழகு
அதிகப்படி ; குரங்குகளில் அவள்
உயர்வு ஒருபடி ; ''இது எப்படி ?''
ரஜினியின் டயலாக் இது.

அவன் அவளை எழுதக்
கூடுதல் தாளாக
வைத்துக் கொண்டான்.
உவமை ; இது எப்படி ?''
இதுவும் ரஜினி டயலாக்தான்.

''அவனை வம்புக்கு
இழுத்துக் கொள் ; தெம்புக்கு
நாங்கள் இருக்கிறோம் ;

தாக்குவோம் கவலைப்படாதே''
என்று அவனை ஊக்கப்படுத்தினான்.

**வாலியை அழைத்தல்**

ருசிய முகந்தை விட்டுவிட்டு
கிட்கிந்தை வந்து சேர்ந்தனர் ;
என்றும் இல்லாத புதிய
அழைப்பு வாலியின்
வீட்டு முகப்பில் எழுந்தது.

''வாடா வெளியே !''
டா போட்டுப் பேசினான்;
''ஒரு கை பார்த்து
விடலாம்'' என்று இருகை
தட்டி அவனைக் கூவி
அழைத்தான் சுக்கிரீவன்.

கோதாவில் இரண்டு
தாதாக்களும் சந்தித்தனர் ;
தாரை வாலியின் மனைவி
தடுத்துப் பார்த்தாள்.

கட்ட பொம்மன் மனைவியாக
அவள் அன்று வசனம் பேசினாள்.
அவன் அதைப் பொருட்படுத்தவில்லை.

வட்டம் வரைந்து அதற்குள்
இருவரும் முட்டிக் கொண்டனர் ;
ஒருவரை ஒருவர் தூக்கிப்
போட்டுப் பந்தாடினர் ;
குட்டிக் கரணம் போட்டுப்
பழகியவர்கள்; அதனால் ஒருவரை
ஒருவர் உருட்டி எடுத்தனர் ;

முஷ்டியால் சின்னவனைப்
பெரியவன் ஓங்கி ஒரு
குத்து விட்டான் ; அவன்
சத்தம் போட்டான்.

அடுத்த வட்டம் ஆரம்ப
மாகியது ; அவனைச் சரிப்
படுத்தி அனுப்பி வைத்தனர்.

அதற்கு முன் அவன் அலறி
அழுதான். இப்படி என்னை
டெப்பாசிட்டு கட்ட வைத்து விட்டுப்
பிராச்சாரத்துக்கு வராமல் ஒதுங்குவது
தகுமா ? என்று கேட்டு வைத்தான்.

''நீயும் அவனும்
டூப்ளி கேட்டுகள் ;
ஒரு தட்டில் வார்த்த
அச்சுகள் ; நீங்கள்
என்ன இரட்டைவால்களா?

ஒரே மாதிரி இருக்கிறீர்கள்;
அடையாளம் தெரியவில்லை''
என்று அறிவிப்புச் செய்தான் ;

கொடி ஒன்று அறுத்து
அதை அவன் தன் இடுப்பில்
சுற்றிக் கொண்டான் ;
அது அவனுக்குச் சிகப்பு விளக்கு ஆகியது.

பச்சைக் கொடி காட்டப்
பட்டது; மறுபடியும்
''குப்கும்'' குத்திக்
கொண்டனர் இருவரும்,

மறைந்திருந்து துப்பாக்கி
ஒரு ரவையைப் பாய்ச்சியது ;
அம்பு துளைத்து வாலி
கீழே சாய்ந்தான்.

அந்த ரவையை எடுத்துப்
பார்த்தான் ; அதில் அரச
முத்திரை குத்தி இருந்தது :
எய்தியவன் ரகுபதி
என்பதை அறிந்து வியந்தான்

இராமனைப் பற்றிப் பல
ஏடுகளில் படித்து இருக்கிறான் ;
உத்தமன் என்பதற்கு அவை
உத்தரவாதம் அளித்திருந்தன.

மறைந்து நின்ற இருவரும்
அவன் முன்வந்து நின்றனர் ;
அவர்களைக் கேட்காத கேள்வி
ஒன்று கேட்டு வைத்தான்.

''கள்ள ஓட்டுப் போட்டது
ஏன் ? அது விதிமுறைக்கு மாறுபடாதோ

என்று வினாவை
எழுப்பினான் ; அது அவர்கள்
வீரத்துக்கு இழுக்கு என்பதைச்
சுட்டிக் காட்டினான்.

இராமன் அவனால் அவனுக்குச்
சமாதானம் கூற முடியவில்லை ;
வழக்கு உரைஞன் அவனுக்குத்
தேவைப்பட்டான்.

''உனக்கும் எங்களுக்கும் நேர் பகை
இல்லை ; போர்ப்படை தொடுக்க
இயலாது ; அதனால் மறைந்து
இருந்து தாக்க நேர்ந்தது'' என்றான்.

''மற்றும் அவன் அடைக்கலம்
என்று சரண் அடைந்து
விட்டான் ; மன்றத்தில்
ஒருவனைத்தான் தேர்ந்து எடுத்து
அப்ருவராக ஏற்றுக் கொள்வர் ;

இது நீதிமன்ற நியதி ;
நீயும் வந்து அடைக்கலம்
என்று படைக்கலம்
போட்டு விட்டு நட்புப்

பாராட்டினால் உன்னை
ஏற்பது என்பது இயலாமல்
போய்விடும்'' என்று
விளக்கம் தந்து அவனை
அடக்கி வைத்தான் இலக்குவன்.

மற்றும் இராமனை ஒன்று வாலி
கேட்டான் ; ''குற்றம்
செய்யாத என்னை நீ
தண்டித்தது ஏன் ?''
என்று கேட்டு வைத்தான்.

''தம்பியின் தாரத்தை
வவ்வினாய் இது ஒரு
தகாத செயல் அன்றோ ?

மாற்றான் மனைவியை
மடக்கி வைத்து

இடக்கு செய்தது
மன்னிக்க முடியாது ;

குடும்பத்தின் அமைதிகள்
அதனால் குலைவு பெறுகின்றன ;
களவையும் மன்னிக்கலாம்
இந்த விளைவுகளை விட முடியாது''
என்று காரணம் காட்டினான்.

சிரிக்க முடியாத நிலை ;
களுக்கென்று சிரித்துப் பேசினான்.

''நாங்கள் விலங்குகள் ;
எங்களுக்கு இருக்கின்ற
ஒரே உரிமை இதுதான் ;

மானிடச் சட்டங்கள்
இடர் விளைவிக்கும்
திட்டங்கள் ; அவற்றை
எங்களுக்குப் புகுத்த
முடியாது'' என்றான் அவன்.

''மொத்தத்தில் யாவருமே
விலங்குகள் தாம் ; நாங்களும்
சில சமயம் விலங்குகளாகத்
தான் செயல்படுகிறோம் ;
மறுப்பதற்கு இல்லை ;

உடல் உறுப்பால் வர்க்க
பேதங்களைப் படைத்துக்
காட்டி நீ தப்பிக்க
முடியாது ; நீ அறிவுடன்

பேசுகிறாய் ; அரசனும்
ஆகி இருக்கிறாய் ;
அதனால் நீ செய்தது தவறு''
என்று அவன் நாவை
அடக்கி வைத்தான்.

அங்கதன் வாலியின் மகன் ;
அவன் அங்கு வந்து நின்றான்;
அவனை இராமனிடம் வாலி
அடைக்கலமாகத் தந்தான்.

**இடையீடு**

பாதிபடம் ஓடியது ; இடையில்
இடையீடு தேவைப்படுகிறது ;
அதற்குள் தேநீர்
குடித்துவிட்டு வந்து இடத்தில்
உட்காருகிறார்கள் ; இது இடையீடு.

மழைக்காலம் வந்தது ; அதனால்
இடையீடு தேவைப்பட்டது ;
கிட்கிந்தையில் சுக்கிரிவனைத்
தங்க விட்டு இவர்கள்
விலகி வாழ்ந்தனர்.

மற்றும் அவனுக்குப் படை திரட்டக்
காலம் தேவைப்பட்டது ;
மலைகளில் சிதறிக் கிடந்த
குரங்குகளை ஒன்று சேர்க்க
அவகாசமும் தேவைப்பட்டது.

இராமனும் இலக்குவனும்
காலம் கருதிக் காத்து
இருந்தனர் , அவர்கள்
ஓலம் அவர்களோடு
அடங்கிக் கிடந்தது.

காலம் கருதி இடத்தான் செயின்
ஞாலமும் கைக கூடும் ; இது
வள்ளுவர் வாய்மொழி.

சுக்கிரிவனுக்கு ஆட்சி
கிடைத்தது ; அதிகாரம்
கைக்கு வந்தது ; அவ்வளவுதான்.

புடவைக் கடை வைத்தான் ;
புது ரகங்களை வரவழைத்தான் ;
அந்த வியாபாரத்தில் அவன்
ஆழ்ந்து நின்றான் ;

வெளிநாட்டுச் சரக்குகளை
விலை கொடுத்து வாங்கி
அந்நியச் செலாவணிக்கு
அதிகம் கொடுத்தான்.

மொத்தத்தில்
கள்ளோ காவியமோ
என்ற கதையை அவன்
ஆய்வு செய்து கொண்டிருந்தான்.

சொன்ன கெடுவுக்கு
அவன் வந்து சேரவில்லை.
கோர்ட்டு அழைப்புகளை
ஒரு சிலர் உதாசீனம் செய்கின்றனர்.

முன் ஜாமீன் பெற்றுச்
சுதந்திரர் ஆகிவிடுகின்றனர் ;
இவன் அழைப்பை அவன்
மறந்துவிட்டான் ;

குளிர் அதனால்
துளிர் விட்ட இன்பத்தை
விட்டு அவனால் வர
இயலாமல் போய்விட்டது.

**இராமனின் ஏவல்**

கடிகாரத்தைப் புரட்டிப் பார்த்தான்.
அதன் முள் அசைவுகளில்
இராமன் முனைப்பு இருந்தது.

விமானத்தில் படைகள் வந்து
ராக்கட் வேகத்தில்
திபுதிபு என்று இறங்கும்
என்று காத்திருந்தான் ;
ஒரு குரங்கு கூட அந்தப்
பக்கம் வால் காட்டவில்லை ;

''கெடுவு தவறிவிட்டது ;
வங்கிக் கடன் இது அல்ல
வசூல் செய்யாமல் இருக்க ;
நீ சென்று வசூல் செய் :''
என்று தம்பியை அனுப்பினான் ;

''காரியம் முடிந்து விட்டது ;
நம்மால் இனி அவனுக்கு ஆவது இல்லை ;
அவன் நெகிழ்ந்து
விட்டான் ; தேர்தல் முடிந்தால்

வாக்காளர்களை யார்
மதிக்கிறார்கள் ? நீ போய்
அவனை அழைத்துவா !

வர மறுததால் அவனைத்
தொலைத்து வா'' என்று
ஆணையிட்டு அனுப்பினான் ;

கிட்கிந்தை நோக்கி
வில்லும் கையுமாக நடந்தான்;
காஷ்மீர் எல்லை காக்கும்
இந்தியப் படை வீரனைப் போல்
விறுவிறுப்பாகச் சென்றான்

துப்பாக்கியும் கையுமாக வரும்
துர்பாக்கிய நிலைகண்டு
திடுக்கிட்ட அனுமன்
செய்வது அறியாது திகைத்தான் ;

''தாரை அறிவு மிக்கவள் ;
அவளால் அவனைத் தடுக்க
முடியும்'' என்று நம்பினான்,
அதனால் அவளை அணுகினான்.

பெண்களில் அழகான சிலரை
அரணாக அழைத்துக் கொண்டு
சரணாக அவன்முன் சென்றாள் ;

அழகியரைக் கண்டால்
அவன் இயற்கையாக
அச்சம் கொள்பவன் ;

''சீதையை அவன் தலையெடுத்துப்
பார்த்துப் பேசியது இல்லை ;
கால் மெட்டியைத்தான் கண்டவன்''
என்று ஒரு கதை உண்டு ;

தலைகுனிந்து நின்றவன் முன்
விதவைக் கோலத்தில்
தாரை நின்றாள் ;

அவளை அவன் காணவில்லை ;
தசரதனை இழந்து
தரித்திரர் ஆன
சரித்திரம் உடைய
தன் அன்னையரை
அவள் வடிவில் கண்டான் ;

சீற்றம் எல்லாம்
சிதறிப் பறந்தது ;
மிடுக்கு எல்லாம்
ஒடுங்கி அடங்கி நின்றான்.

''இருந்து வந்து
விருந்து உண்க''
என்று அவனை
அருந்தும்படி தாரை
இனிது பேசிக் குளிர வைத்தாள்.

''மருந்து காண வந்தேன் ;
என் தமையன் பிரிந்து
வருந்துகிறான் ; படைகள் வருகை
எங்கே ! சுக்கிரீவன் எங்கே !''
என்று வினவிக் கேட்டான்.

''அமைச்சர் கூட்டம்
உள்ளே தாளிட்டு
நடக்கிறது ; மற்றவர்கள்
அனுமதிக்கப் படுவது இல்லை'' என்றனர்.

''ஆட்களைத் திரட்ட
ஆணை பிறப்பிக்கிறான் ;
அதனால்தான் தாமதம்'' என்றாள்,

அங்கதன் அதற்குள்
அந்தப்புரம் ஓடோடிச் சென்று
அப்பனின் தம்பியை
அழைத்து வந்து சேர்ந்தான்.

சுக்கிரீவன் வந்தான் ;
தேர்தலுக்குப் போடும்
வணக்கத்தை இலக்குவனுக்குப்
போட்டான் ; ''மன்னிக்கவும் ;
காலதாமதம் ஆகிவிட்டது ;

கோப்பு விரைவில் கையெழுத்து
ஆகிவிடும் ; படைகள்
வந்து சேர்ந்து விடும்'' என்றான்.

''இந்த அரசியல் அகராதியை
அடக்கிவை ; விரைவில்
வந்து சேர்க'' என்று கூறி
விடை பெற்றுத திரும்பினான்.

**சேனைகள் வருகை**

மயக்கம் மனித வாழ்வுக்குத்
தேவைப் படுகிறது ; அதிலேயே
ஆழ்ந்து விட்டால் அவன்
வாழ்வு தேக்கம் அடைந்து விடுகிறது.

சுக்கிரீவன் விழித்துக் கொண்டான் ;
இனி அவன் செயலைத் தவிர
வேறு சிந்தனை செய்யவில்லை.

படைகளைத் திரட்டிக் கொண்டு
இராமன் அவன்
பாதம் பணிந்து நின்றான்.

சடாயு சாகும் முன் சில
வார்த்தைகளைக் கொட்டினான் ;
''இராவணன்தான் சீதையைக்
கவர்ந்து சென்றான்'' என்றான் ;
அதில் தெளிவு இருந்தது.

அவளை அவன் எங்கே
மறைத்து வைத்திருக்கிறான் ?
அது மாயக் கதையாக இருந்தது.

குரங்குகள் தேடி எடுத்த
அணிகலன்கள் சிலவற்றைச்
சுக்கிரீவன் எடுத்து வைத்தான் ;
அவள் வழியில் போட்டுச்
சிதறியவை ; அவையும்
சீதை சென்ற திக்கை
அவர்களுக்கு அறிவுறுத்தின.

அங்கதன், சாம்பவான்,
அனுமன், சுக்கிரீவன்
இவர்கள் தலைமைத்
தளபதிகளாக இயங்கினார்கள் ;
சுக்கிரீவன் அவர்களுக்கு அரசன்.

சாம்பவான் அவன்
ஆள்வாட்ட சாட்டமாக இருந்தான்;
உடலில் முடி
மிகுதியாக இருந்தது.

அவனைக் "கரடி"
என்று விழைந்து அழைத்தனர்.
திக்குகள் மொதம் நான்கு;
அவர்கள் திசை அறியாமல்
திக்கு முக்கு ஆடினர்; சீதையை
எங்கே சென்று தேடுவது?

தெற்கே சென்றவன் ஒரு
வேளை திசை மாற்றிச்
சென்றிருந்தால் என்ன செய்வது?
தென்திசை செல்வது தேவை
என்று அனைவரும் செப்பினர்;
அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்
அங்கதன், நீலன், அனுமன்,
சாம்பவான்; துணைவர் சிலர்.

இலங்கைக்கு ஏகும்வழியைச்
சுக்கிரீவன் ஒரு வரைபடம்
தந்து விளக்கிக் கூறினான்.

விந்திய மலை; அதனைக்
கடந்தால் நருமதை ஆறு;
ஏமகூடமலை; அதனையும்
கடந்தால் பெண்ணையாறு;

விதர்ப்ப நாட்டைக்
கடந்தால் பாண்டுமலை;
கோதாவரி; சுவணம்;
இந்த ஆறுகளைக் கடந்தால்
கொங்கணம்; குலிங்க நாடு;

அதன்பின் அருந்ததிமலை;
அதனைக் கடந்தால்

வடவேங்கடமலை ;
பின் காவிரியாறு ;
தமிழ் தலைநகர் மதுரை ;
அதையும் கடந்தால்
மகேந்திர மலை.

அதன் மீது ஏறி
அடுத்தகரை பார்த்தால்
இலங்கை தெரியும்''
என்று வழிகளை எல்லாம்
வகையாகக் கூறினான்

**இராமன் அடையாளம் கூறுதல்**

இலங்கையை அடைந்தால்
சீதையைக் காணமுடியும்
என்ற நம்பிக்கை இருந்தது.

அங்கே யார் சீதை ?
அவள் எப்படி இருப்பாள் ?
ஆப்பிரிக்கப் பெண்ணாக
இருந்தால் சுருள்முடி
காட்டி விடும்.

வெள்ளைக் காரிகையாக
இருந்தால் அவள்
நிறம், சட்டைகள் காட்டி விடும்.
சேரத்து இளம்பெண்
என்றால், அவள் மேல் முண்டு
அது துண்டு காட்டிவிடும் ;
ஆந்திரம் என்று சொன்னால்
சுந்தரத் தெலுங்கு கேட்கும் ;

குஜராத்து மாளவம்
அவள் கால்காப்பு

வேறு சால் ஜாப்பு
தேவை இல்லை; காட்டிவிடும்.

நாட்டுக்கு ஒரு
பாணி; எந்த
வாணியையும் அது
குறித்து விடும்;

சீதை சனகன் மகள்;
மண்ணில் கிடந்தவள்;
சனகனால் வளர்ந்தவள்;
அவள் சாதி ஊர்
அடிப்படை தெரியாது;
அவளுக்கு எந்த
முத்திரையும் கிடையாது.

காவிய நாயகிகளை
ஓர் ஓவியம் கொண்டுதான்
உணர்த்த முடியும்.

இராமன் எழுதி வைத்த
ஓவியம்; அது சொற்
காவியம்; அவன்
சொல்ல அனுமன்
கேட்டு வைத்தான்;

''காலடிகள் தாமரை;
கணைக்கால் விரால்மீன்;
தொடை வாழை;
இடை உள்ளுறை''
இப்படி அடி, தொடை, நடை
சீர், பா இவற்றின்

இலக்கணத்தை இயம்பினான்;
''உள்ளுறை வெளிப்படாது'' என்றான்.

அழகி என்று பட்டால்
அப்படி ஒருத்தி எதிர்பட்டால்
அவளைச் சீதை என்று
அறிவித்து விடு; பிறகு
பார்த்துக் கொள்ளலாம்''
என்றான் இராமன்.

ஆள் மாற்றம் ஏற்பட்டால்
பேச்சுக் கொடுத்துத்
தெரிந்து கொள்ளலாம்''
என்று சில அந்தரங்கங்களை
அம்பலப்படுத்தினான்;
இருவருக்கும் ஏற்பட்ட
ஆடல் உரைகள் ஒருசில ஓதினான்.

''விட்டுப் பிரிகிறேன்'' என்ற போது
''பிரிவினும் சுடுமோ காடு''
என்று சூடாகக் கேட்டாள்.

மதிலைக் கடப்பதற்கு முன்
''வந்ததோ அடவி'' என்று
அவசரப் பட்டாள்.

வில்லை முறித்த போது
''வீரன் அவன் அல்ல
என்றால் உயிரை முடிப்பேன்''
என்று தோழியிடம் கூறினாள்.

''இந்தச் சில வசனங்களை
அவளுக்கு நினைவுப்படுத்து
உடனே அவள் உள்ளம்
மகிழ்வாள்; இதுவும்
ஓர் அடையாளம்'' என்றான்.

முடங்கல் எழுதி
அனுப்பி இருக்கலாம்;
தடங்கல் அங்கே
எழுத்தாணி இல்லாமையாகும்.

காதற் கடிதங்கள் வந்ததே
கல்லூரிகள் வந்த பிறகுதான்;
அக்காலத்தில்
அந்த வாய்ப்புகள்
இளைஞர்களுக்கு ஏற்பட்டதில்லை.

இருந்திருந்தால் பழைய
எழுத்துக் கட்டுகள் சில
அவன் எடுத்துத்
தந்திருப்பான்;
அதனால் வாய்மொழி
மூலம் செய்தி அனுப்பினான்.

சம்பாதி என்னும் கழுகு
அவன் சடாயுவின் தமையன் ;
உயரப்பறந்தவன் ; அவனும்
இராவணன் சீதையை எடுத்துச்
சென்றதை ஊர்ஜிதம் செய்தான்.

யார் கடலைக் கடப்பது ?
அதற்கு அடல் யார்பால் உள்ளது ?

கரடி ராஜா
அவன் ஒரு கரடி விட்டான் ;
இடறித் தான் விழுந்து
விட்டதால் கால் ஒன்று
சற்று ஊனம் என்றான் ;

அங்கதன் அடுத்துப் பேசியவன்
''இலங்கை என்னால் செல்ல
முடியும்; திரும்பி வருதல்
உறுதி இல்லை'' என்று விளம்பினான்.

அனுமனே ஆற்றல் மிக்கவன்
என்று போற்றிப் புகழ்ந்து
சுமையை அவன் தலையில்
தூக்கி வைத்தனர்

மகேந்திர மலையின் உயரத்தில்
ஏறி நின்று பார்த்தான்.

அக்கரை பச்சை என்பதை
அறிந்தான் ; கோபுரங்கள்
இங்கிருந்து அவனால்
காண முடிந்தன.
ஒளி விளக்குகள்
பொன்னைப் போல் ஒளித்தன,
அதனால் அதனை பொன்னகர்
என்று அவன் விளித்தனன்.

ஒரே மூச்சில் அவன்
தாவ முயன்றான்
அதை அவன் கடலைக் கடந்து
சென்றான் என்று கவிஞர்கள்
விரிவு படுத்தினர்.

## 5 சுந்தர காண்டம்

கையில் ஒரு நிழற்படம்
வைத்திருந்தான்; அது
சீதையின் எழிற்படம்;

அதை வைத்துக் கொண்டு
ஜாக்கட் போட்டிருந்த
ஜான்சிகளைக் கவனித்தான்;
ஜானகி மட்டும் அவனுக்குத்
தென்பட வில்லை.

"இந்தத் திருட்டு அரசன்
இருட்டில் எங்காவது அவளைச்
சுருட்டி வைத்திருப்பான்."
என்று தெருட்டிப் பார்த்தான்.

இவன் சென்ற நேரம்
டி. வி. திருப்பி விட்டு
வயதினர்க்கு மட்டும்
என்று காட்டப்படும்
ஆபாசப் படங்கள்
பார்க்கும் நேரம்.

குறட்டை ஒலி;
டரட்டைத் தலையன்;
மிடாக் குடியன்;

அது கும்பகருணன் வீடு
என்பதை அறிந்து கொண்டான் ;
பீப்பாய் உருட்டி வைத்ததுபோல்
அவன் உருண்டு கிடந்தான்.

அடுத்தது இறைவணக்கம் :
ஆழ்வார் திருநகர் ;
தெய்வப் பாடல்கள்
பாடிக் கொண்டிருந்தனர் ;
அது வீடணன் இருக்கை
என்பதை அறிந்தான்.

அடுத்தது இந்திரசித்து ;
இளைஞர் படைத்தலைவன் ;
அழகன் என்று அவனைக்
கூறினர் ; வீரன் ;
''வில்லுப் பாட்டுப் பாடுவதில்
வல்லவன்'' என்ற பெயர் எடுத்தவன்.

அவன் மர்மக் கதைகளைப்
படித்துக் கொண்டிருந்தான்.
அதனால் மாய சாலங்கள்
தெரிந்தவன் என்று அவனை
விவரித்தனர்; அவன்
இராவணன் மகன்
என்பதை அறிந்து கொண்டான்.

அடுத்த வீடு
கோலமிட்டு மெழுகி இருந்தது ;
வெள்ளிக்கிழமை ஆக்கி
வைத்திருந்தாள் ;
நியமம் தவறாத
நியதி உடையவள் ;
நித்திலக் கோவை ;
ஒளிவீசும் வாழ்க்கையள் ;

மண்டோதரி வீடு
இவள் தனித்து உறங்கினாள் ;
இராவணன் அங்குப்
பகலில் மட்டும் வந்து போனான்
என்பதை அவள் தனிமை
காட்டியது ; அவள் மதிக்கத்
தக்கவள் என்பது அவன் கருத்து.

அடுத்தது அவன் கண்டது
ஓவியக் கூடம் ;
சுவர்களில் சீதையின்
சித்திரத்தை வரைகோடுகள்
வைத்து நிரப்பி இருந்தான்.

மூன்று முனை இலைவடிவம்
அது காதல் சின்னம் ;
அதையும் அங்கும் இங்கும்
கிறுக்கி வைத்திருந்தான்.

அது வேதனையைத் தேடிச்
சாதனை படைத்தவன்
இராவணன் வீடு
என்பதை அறிந்தான்.

தூங்குபவனைத் தட்டி
எழுப்பக் கூடாது என்று
அவனைத் துயரத்தில் விட்டு
அந்த இடத்தைவிட்டு அகன்றான்.

நகரத்து மாளிகைகளை
விட்டு அகரத்துக் கோடியில்
இருந்த அசோக வனத்தை
அடைந்தான் ; அவலத்தின்
சூழல் என்பதை அறிந்தான்.

**திரிசடை**

பேச்சுத் துணைக்கு அங்கு
மணமாகாத கன்னி ; வீடணன்
ஒரே மகள் திரிசடை ; அங்கு
அவள் அனுமதிக்கப்பட்டிருந்தாள்.

இவன் அங்குச் சென்ற
நேரம் ; அவள்

வானிலை அறிக்கை
வாசித்துக் கொண்டிருந்தாள்.

''இடியுடன் கூடிய மழை
பெய்யும்'' என்று அறிவிப்புச்
செய்தாள் ; அதற்கு உள்ளுறை
இராம இலக்குவர் வருகையும்,
அதனால் பெறப்போகும்
நல்வாழ்வும் என்பது அடங்கியது.

கதைகள், கனவுகள், சகுனங்கள்
அவளுக்குச் சாதகமாகத்
தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தாள்.

மற்றும் பேச்சோடு பேச்சாக
அவள் வருங்காலத்தில் தான்
அந்த நாட்டின் இளவரசி
ஆவது உறுதி என்று தெரிவித்தாள்.

''அடுத்த வாரிசு
தன் தந்தை வீடணன்தான் ;
திருமகள் தன் வீட்டுக்குப்
பயணம் செய்வாள்'' என்றாள்.

கற்களின் மத்தியில் முளைத்த
நன் மருந்துச் செடி என
அவள் சொற்கள் இருந்தன ;
சீதையின் மனப் புண்ணுக்கு
அவை இதம் அளித்தன.

அங்கே முரட்டுக் கும்பல்
வரட்டுக் கூச்சல் இட்டுக் கொண்டு
அவளைக் காவல் காத்தனர் ;
அந்த இருட்டுச் சூழலில்

அவள் மெழுகுவர்த்தி போல்
அவளுக்காக உருகியவளாய்
ஒளி தந்து கொண்டிருந்தாள்.

காவல் தலைவன் காலடி
அவன் மிதியடி கேட்டது ;
இருவரும் தனித்தனிப்
பிரிந்து ஒதுங்கிச் சென்றனர்

இவள்தானா சீதை ?
தான் தேடி வந்த கோதை ;
அதற்கு விடை காண
விரும்பினான் ; இராவணன்
நடைவிளக்கம் தந்தது.

காலை நாளிதழ் தவறாமல்
வந்து விழுவதைப் போல்
அவன் அங்கு வந்து நின்றான்.

வார இதழ் சில
ராசி பலன்கள்,
பரிசு அறிவிப்புகள்,
விளம்பரக் குவியல்கள்
புரட்டிப் பார்க்காமல்
தூர எறிவது போல
அவனைத் துரும்பாக மதித்தாள்.

அவன் பச்சைத் தமிழில்
கொச்சைச் சொற்களில்
தன் இச்சைகளை
வெளிப்படுத்தியவனாய்ப் பேசினான்.

''நாளை நாளை என்று
நாட்கள் கழிகின்றன ;

கூடும் வேளை எது ?''
என்று கேள்விகள் கேட்டான்.

அவசரப்பட்டு அவன்
ஆவேசப்படவில்லை ; தன்
பெயருக்கு அவன்
அபகீர்த்தி தேடிக் கொள்ள
ஆசைப்படவில்லை.

தமிழ்ப்படங்கள் சில
அவன் பார்த்திருக்கிறான் ;
தலைசுக்கல் ஆக்க
அம்மிக் கற்கள் அவர்கள்
கையாள்வதைக் கண்டு
தன் தலையை அவன்
சுக்கல் நூறு ஆக்கிக்
கொள்ள விரும்பவில்லை.

அவனிடம் கண்ணியம்
இருந்தது ; விருப்பம் இல்லாமல்
அவளைத் தொடுவது தடுப்பாகக்
கொண்டு நடந்து கொண்டான்.

அவன் ஜெபம் அங்குச்
சாயவில்லை ; தவணை நாள்
அவனே வைத்துவிட்டு
நாளைக்கு என்று நாவசைத்து
அந்த இடத்தைவிட்டு நகர்ந்தான்.

அங்கு இருந்த
சூழ்ச்சிக் காரரிடம்,
''அவளுக்குப் பாடம் புகட்டித்
தேர்வில் வெற்றி பெறச் செய்வது

உங்கள் கடமை'' என்று
ஆணை விதித்துச் சென்றான்.

சந்நிதானத்தை மறைத்
திருந்த நந்தி விலகியது ;
தெய்வ தரிசனம்
நந்தனுக்குக் கிடைத்தது.

அனுமன் அவளைச் சந்தித்தான் ;
கரம் கூப்பி வந்தித்தான் ;
சிரம் தாழ்த்தி வணங்கினான் ;
இராமன் அவன் திருப்பெயரைச்
சாற்றினான்; அவன புகழ் போற்றினான்.

கத்தி ஒன்று கைக்குத் தேடினாள் ;
அவளுக்குக் குருக்கத்தி
கொடிதான் கிடைத்தது ;
சுருக்கு மாட்டிக் கொள்ள
அவள் சுறுசுறுப்பானாள்.

அந்த நேரத்தில் தான்
இவன் இராம நாமத்தைச்
செவியமுதம் ஆக்கினான் ;
அவள் உயிர்ப்புப் பெற்றாள்.

இராமனின் ஏற்றத்தையும்,
தோற்றத்தையும் அவன் தன்
மாநறம் கொண்டு உரைத்தான்.

''தோளைக் கண்டவர்
தாளைக் காண்பதில்லை ;
தாளைக் கண்டவர்
தோளைக் காண்பது இல்லை''
என்று புதிர் கதை போட்டான்.

''அவன் திருமுடியை
யாரும் முடியக் கண்டது
இல்லை'' திருமூலரைப்
போலத் தித்திக்கக் கூறினான்.

இராமன் பேரழகன் என்பதையும்,
தெய்வத் தன்மையன் என்பதையும்
திக்குவாயால் பேசி
அவளைத் திகைக்க வைத்தான் ;

''மானுடத்தின் வெற்றியை
உலகுக்கு உணர்த்த வந்த
தெய்வமகன்'' என்று அவன்
உயர்த்திப் பேசினான் ;
அது அவன் மதிப்பீடு ;
அது இன்றைய உலகத்தின்
வழிபாடு ; போற்றத் தக்கது.

அப்பொழுதும் அவனை அவள்
முழுவதும் நம்பவில்லை ;
அரக்கன் இயல்பினன் யாரோ
குரக்கு வடிவத்தில் வந்து தன்
சரக்கை விற்கிறான்'' என்று நினைத்தாள்.

''ஏடு ஏதாவது எழுதி வைத்தது
காட்ட இயலுமா?'' என்று
அவனைக் கேட்டு வைத்தாள் ;

''ஏடு அறியேன் ; எழுத்தறியேன்;
காடு அறிவேன் ;
காட்டில் மலையில் திரிவேன் ;
மோதிரம் உண்டு'' என்று கேட்டதற்கு
ஆதாரமாக அதைக் காட்டினான்.

பெண்ணுக்குத் தாலி ;
ஆணுக்கு மோதிரம் ;
முன்னதைக் கழற்ற மாட்டார்கள் ;
பின்னதைப் பிரிகக முடியும் ;
இதுதான் வேறுபாடு.

மண ஒப்பந்தத்தைக் காட்டும்
தீப்பந்தம் அது ;
அதைவிட விளக்கம்
அங்குத் தேவைப் படவில்லை.

அவள் கண்களில்
மகிழ்ச்சி பொங்கியது ;
குளிர் நீர் தங்கியது ;

அதை அவள்
குளிப்பாட்டித்
தூய்மைப் படுத்தினாள் ;
''தீயவர் நாட்டுக்கு
வந்தது'' என்று கூறி.

அதனைப் பார்த்ததும்
பழைய நினைவுகள்
போர்த்திக் கொண்டு
வந்து குவிந்தன.

''தாரம் தான் அல்லள்
என்றாலும் அவன் தன்
வீரம் காட்டுதல் வேண்டும்''
என்று விரும்பினாள்.

''தாடகையைக் கொன்றான் ;
பரசுராமனை வென்றான் ;

இந்திரன் மகன் சயந்தன்
காக்கை வடிவு கொண்டு
என் யாக்கையைக் குத்தினான் ;
அவன் கண் பார்வை ஒன்றைப்
போக்கினான் ; அந்த வீரம்
இன்று ஏன் ஓரம் கட்டியது?''
என்று வினாக்களைத் தொடுத்தாள்.

''இந்த இப்பிறவியில்
இரு மாதரைச் சிந்தையாலும்
தொடேன்'' என்று கூறிய அவன்
எனக்குப் பின் யாரோடு
வாழப் போகிறான் ?
திட்டம் ஏதாவது உள்ளதா''
என்று மற்றோர் வட்டத்தைக் கிழித்தாவ

''மற்றொருத்தியைத் தொடாமல்
இருப்பது மன உறுதி ;
இருப்பவளை மற்றவன் கொள்ள
விடாமல் காப்பது
ஒருவன் செயல் உறுதி.

உள்ள பொருளைத்
தொலைத்து விட்டுப் பின்
''பட்டினியால் சாவேன்''
என்று பெருமை பேசுவது
வெறும் வீம்பு ஆகும் ;
கவைக்கு உதவாத
பேச்சு அது'' என்றாள்.

''உயிர் இழந்த பின் தமக்காக
இறந்தவர் ஒப்பாரி வைக்க இயலாது.

அவசரப்பட்டுச் சிலர்
ஆத்திரப்பட்டுத்
தம்மைத் தாமே
மாய்த்துக் கொள்கின்றனர் ;
கேட்டால் கவரிமான் என்று
விவரம் தருகின்றனர்.

இடுக்கண் வரும் போது
நகுதல் வேண்டும் ; அதனை
அடுத்து வருவது நம்பிக்கை''
என்று ஊக்க உரைகள் உரைத்தான்.

''உள்ளத்து அனையது உயர்வு ;
பள்ளத்தில் விழுவது மடமை ;
அது படுகுழியில் தள்ளி விடும்.

மலை குலைந்தாலும் நிலை
குலையாதவனே மனிதன் ;
அலை போன்றவை மனக் கவலைகள் ;
அவற்றில் நீந்துவது கரை
சேர்வது கலங்காத வீரம்.

சோர்வு என்பது மனித
சாய்வுக்கு வழி உண்டாக்கும் ;
பொறுமை கடலினும் பெரிது ;
அது நீடிப்பது மலையினும்
மாணப் பெரிது'' என்றான்.

''வாழ்க்கை நாம் படைப்பது ;
ஆக்குவது, அழிப்பது.
உயிர் நமக்கு உடமை அன்று ;
படைப்புத் தந்தது ; அதை
உடைத்து எறிவது மடத்தனம் ;
அது இந்த உலகத்தின் உடைமை.

நான் இடையிட்டது
தாள் அது இன்மையால் அன்று ;
ஆள் இருக்குமிடம்
இது எது என்று அறியாதது'' என்றான்.

''திங்கள் ஒன்று பொறுப்பேன் ;
ஒரு நிலவு நிறை நாள்;
ஒரு குறை நாள்;
இரண்டும் சேர்ந்தது
ஒரு திங்கள்.

அதற்கு மேல் என்
உயிர் தாங்காது''
என்று அச்சுறுத்தல்
செய்தாள் ; தன்
உள்ளக் கருத்து
இது என அறிவித்தாள் ;
''கண்டதற்கு இராமன்
சுண்டு விரல் ஆழி தந்தது
உண்டு ; உம்மிடம் இருந்து

கொண்டு செல்வதற்கு
அடையாளம்
தந்து உதவுக''
என்று அனுமன் கேட்க,

துகிலில் தான்
பொதிந்து வைத்த
தலைச்சுட்டி அதை
அவனிடம் தந்தாள்.

''இதை நான் இப்பொழுது
சூடுவது இல்லை ;
சூடாமணி'' என்றாள்.

விடைபெற்றுச் செல்லுமுன்
''தடை ஏதும் உளவோ''
என்று புதிய கருத்து
ஒன்று அவளிடம் தெரிவித்தான்

''திங்கள் ஒன்று தேவை
இல்லை ; இன்று
ஞாயிறு ; இதே நாள்
இன்றே விடுதலை ;

என் தோள் மீது
அமர்ந்தால் நாள்
எதுவும் காத்திருக்கத்
தேவை இல்லை ;

அ்த்த கரையில்
எந்தக் கறையும்
இல்லாமல் சேர்க்க
முடியும்'' என்றான்.

சிரிக்காத சீதை
சிறிது சிரித்து வைத்தாள் ;
''நீயும் ஒரு ஆண்மகன் ;
அதை நீ மறந்து
பேசுவது தகுமோ ?

அது மட்டும் அன்று ;
குழந்தையை வைத்துக்கொண்டு
குடக் கூத்து ஆடிய கதைதான் ;
நீயும் குடத்தை வைத்து
ஆடமாட்டாய் ;
குழந்தையையும்
கீழே போடாமல்

காக்க மாட்டாய்.
நடுக் கடலில் இந்தக்
கொடியவர்கள்
இடுக்கண் தந்தால்
எப்படித்தடுக்க முடியும்?
சிந்தித்துப் பார்''
என்று அவனை
வாழ்த்தி அனுப்பினாள்.

ஊருக்குத் திரும்பு முன்
அரிசி களைந்து
உலையில் போட
விரும்பினான் ; அது
கொதிக்க வேண்டும்
என்று மனம் கொந்தளித்தான்.

மாளிகைகள் கட்டிடங்கள்
இவற்றில் தாவிப்பாய்ந்தான்;
கோபுரக் கலசங்களைச்
சாயவைத்தான் ; எதிர்த்தவரை
மாய வைத்தான்.

அரண்மனை வாயிலின் முன்
'கட் அவுட்' ஒன்று
இராவணன் தன் வடிவில்
பத்துத் தலைகள்
எழுதித் தன் பராக்கிரமத்தை
விரிவு படுத்திக் காட்ட
வைத்திருந்தான்.

ஆற்றல் மிக்கவன்
என்பதைக் காட்ட
இந்த விசித்திர

சித்திரம் தீட்டப்
பட்டு இருந்தது.

அதனைக் 'கட் அவுட்'
செய்து அனுமன் கீழே
சாய்த்தான் ; அவன்
கலா ரசிகன்;
மிகைபடக் கூறுவது
உயர்வு நவிற்சி;
அவனால் ஏற்க இயலவில்லை.

எதிர்ப்புத் தெரிவிக்கத்
தொண்டர்கள் தலைவர்களின்;
கட்அவுட் கொளுத்துவது
எங்கோ பார்த்திருக்கிறான்;
அந்த நினைவு அவனுக்கு,

வீடியோ படம் எடுத்து
ஊர் எங்கும் இந்நிகழ்ச்சி
காட்டப் பட்டது ; அந்த நாள்
அந்த நகர் கொந்தளித்தது.

அவனைக் கட்டிப்
பிடித்துவர
இளைஞர் படைத்தலைவன்
இராவணன் மூத்த மகன்
இந்திரஜித்து அவனை
அணுகினான் ; கயிறு
கொண்டு பிணித்தான்.

"கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்;
காலம் வரும்" என்ற
வாக்காளர்கள் கொள்கை
அவனை அடக்கி வைத்தது,

இராவணன் அரண்மனை
அவன் கொலு விருக்கை;
உள்ளே செல்ல
யாருக்கும் அனுமதி இல்லை ;
"இதுவே உள்ளே
போக உத்தமமான வழி"
என்று இழுப்புக்கு
அவன் இசைவு கொடுத்தான்.

## இராவணன் கொலு விருக்கை

பத்துத்தலைகள் இருக்கும்
என்று யாரோ சொன்னார்கள;
அவனிடம் பற்றுதலை இருந்தது.
கட்டிக் கொணர்ந்து
நிறுத்தியவனை அவன்
தட்டிக் கேட்டான் ;

"யார் நீ? விசா வகையறாக்கள்
இல்லாமல் எப்படி உள்
நுழைந்தாய்? நீ
அந்நிய நாட்டு
ஒற்றன் ; அதனால்
உன்னைச் சிரச்சேதம்
செய்யச் சட்டம்
இடம் தருகிறது"
என்று வாதிட்டான்.

"நீதிபதி இடத்தில்
நின்று நீ பேசுகிறாய் ;
நீதிபதியே குற்றவாளியானால்
ஏது பதில்?" என்றான்.

''மாற்றான் மனைவியைச்
சிறை வைத்தாய் ;
இது மாபெருங்குற்றம் '
என்று அவன் மீது
குற்றம் சாற்றினான்.

''சீதையை விட்டு விடு ;
பிழைத்துப் போவாய் ;
இல்லையேல் நீ
அழிந்து சாவாய்'' என்றான்.

கருப்பு அங்கிகள் அணிந்த
சட்டைக் காரர்கள்
குற்றவாளி யார் ? என்று
கூறமுடியாமல்
வாய் அடங்கி இருந்தனர்.

அறத்தைக் கொள்முதல் செய்து
அதை வைத்து வாணிகம் பேசும்,
கொள்கையன்; அறவிலை வாணிகன்
வீபீடணன் வாய்திறந்தான்;
''ஒற்றன் என்றால் அது
குற்றம் தான் ; அவன்
இங்கே வந்தவன்
தூதுவன் ; அரசியல்
பேசுகிறான் ; விடுதலை
தக்கது'' என்றான்.
''ஒற்றனா தூதுவனா
எப்படி அவனை
எடுத்துக் கொள்வது ?
இவன் வானரன் ;
இவன் வாலில்

நெருப்பு வைப்பதே
தக்கது'' என்று அரசன்
முடிவு கூறினான்.

வாலைச் சுற்றித்
துணிகள் சுற்றி
எண்ணெய் ஊற்றி
எரியவைத்தனர்.

தீபாவளிப் பட்டாசு,
மத்தாப்பு, வாணவேடிக்கை
அதை அவன் அங்கு
நிகழ்த்திக் காட்டினான்.

பற்றிய நெருப்பைக்
கொண்டு ஊர்
சுற்றிச் சென்றான்.

வழியில் வந்தவர்களைத்
தாக்கி வீழ்த்தினான் ;
எதிர்த்தவர்கள் பலரைச்
சாய்த்து உருட்டினான்.

அவன் வைத்த
நெருப்பு ஊரைப்
பாதி அழித்தது ;
பாதி நின்றது.

சீதை இருந்த சோலை
அது பச்சை இலைகள் கொண்டது ;
அதனால் அது பற்றவில்லை ;

'பத்தினி அவள் அதனால்
பற்றவில்லை'' என்று
சொன்னவரும் உண்டு.

அது நன்மைகள் நாடிச் சொல்லியது.
கற்புக்கு அவர்கள் தந்த
மதிப்பு அது ; மதிக்கத்
தக்க கருத்தே யாகும்.

''மழை பெய் என்றால்
பெய்யும்'' என்று
வள்ளுவர் கூறியதும்
பெண்ணுக்குத் தந்த மதிப்பு ;

இவற்றை எல்லாம்
கேள்வி கேட்டுக்
கொண்டிருப்பது என்பது
குதர்க்கமாக முடியும்.
நம்பிக்கைகள், தவறுகள்
இவை நமக்கு
நல்லவை என்றால்
ஏற்றுக் கொள்வது தக்கது ;
தவறு ஆகாது ;
நல்ல கருத்துகள்.

கொடிச் சீலைகளை
அவன் வெட்டிச்சாய்த்தான் ;
கொடி சேலைகளை அவன்
தொடவே இல்லை ; அவன்
பெண்ணுக்கு மதிப்புத்
தந்தான் ; அதுமட்டுமல்ல ;
பெண்ணை ஒதுக்கி வாழ்ந்த
தனி மனிதன்.

மாவீரனாக நாடு திரும்பினான்;
புகழ்மாலை சூட்டிக் கொண்டு
புவிக்கு நாயகன்பால் ஏத்திச்
"சேர்ந்தன நன்மைகள்" என்றான்.
"நங்கை நலம்" என்றான்.

## 6. யுத்த காண்டம்

"சீதை உயிர் வாழ்கிறாள் ;
அவள் சீர் அழியவில்லை"
இந்த இரண்டு செய்திகளைக்
கண்டு வந்த அனுமன் உரைத்தான்;
போர் என்பது முடிவு ஆகியது ;

அணி வகுத்து நின்றனர்;
சிதைந்து செல்லும் இனம்
அவர்களை ஒன்று படுத்தியது
அரிய செயல் ; அதனை
தளத் தலைவர்கள்
செய்து முடித்தனர்.

சேனைகள் அலைகளைப்
போலத் திரண்டிருந்தன.
நீர் அலையினின்று
இந்தப் படை அலையை நோக்கி
ஓர் மனித தலை
அசைந்து வந்தது.

கருப்பு நிறத்தவன் ; ஆனால்
வெள்ளைக் கொடி தாங்கி
இருந்தான் ; வெள்ளை
சமாதானச் சின்னம்;

மாற்றான் ; அவன் அடையாளம்
தெரிந்தது ; அவனைக் கட்டி
இழுத்து வரக் கலந்து
ஆலோசனை செய்தனர்

''எதிர்கட்சிக் காரன்
பதவி நோக்கி வருகிறான் ;
தலைமையோடு அவனுக்கு மோதல் ;
அதனால் இவன் தனித்து
வந்து சேர்கிறான்'' என்றனர்.

அனுமனுக்கு அவனை
அடையாளம் தெரியும்.
அரக்கர் சபையில் அன்று
அவனைத் தப்பிச் செல்ல
வழக்காடிய அறச் செல்வன்
என்பது தெரியும்; அவன்
பெயர் கேட்டுத் தெளிந்தான்.

வீபீஷணன் இது வடசொல்;
அவன் தமிழ் நாட்டை வந்து
சேர்ந்து விட்டான்.
அவனை நாம் இனி
வீடணன் என்றே அழைப்போம்.

கம்பர் தமிழ்ப் பற்று
உடையவர்; அவர் பல
வடசொற்களை மாற்றித்
தமிழாக்கம் செய்தவர் ;
வீடணன் என்றே
காவியத்தில் அவன்
அழைக்கப் படுகிறான்.

இலக்குமணன் அவனை
இலக்குவன் என்று அழைப்பார் ;
ரம்மியமானவன் ராமன்;
அழகன் என்றே பல
இடத்தில் இராமனை
அழைப்பார் ; இது
அவர் புலமைத் திறன்;
தமிழ்ச் சான்றோன்.

எதிரியை ஏற்றுக்
கொள்வதா இல்லையா
என்பது வாதம்.

''நாடு வேறு பட்டவன்
அவனை நம்ப முடியாது ;
தென்கோடித் தமிழன் ;
அவன் பேசும் மொழி
நமக்கு விளங்காது.

ஒரே இனம்தான்
என்றாலும் கடல் பிரித்து
வைக்கிறது ; அரசியல்
சட்டம் அவனை அனுமதிக்க இடம்
தராது'' என்று அறிவித்தான்
சாம்பவன் ; அவன் பெயரை
இன்று ஜாம்பவான்
என்று திரித்துக் கூறுகின்றனர்.

அவன் பழைமை வாதி;
''சாதிக் கலப்புக்
கூடாது'' என்று சாதித்துப் பேசினான்.
''இன்று அகதி என்று வருகிறார்கள்;
நாளை அவர்கள் இந்த

மண்ணே கதி என்று
நகர்வதில்லை ; அசாம்
அந்த நாட்டு கதியைப்
பார் ; அவதிப் படுகிறது''
என்று அண்மை அரசியலை
அவன் எடுத்துக் கூறினான்.

அனுமனை அபிப்பிராயம்
கேட்டனர் ; அவன் காரியவாதி,
''நல்லவனோ, கெட்டவனோ
இது நாயகன் படத்து வினா;
அது நமக்குத் தேவை இல்லை.
அவனால் நமக்கு நன்மை
உண்டா இல்லையா''
அதுவே நம் ஆய்வு ;
நன்மை உண்டு ; அதனால்
நயப்போம் அவனை'' என்றான்.

இலக்குவன் எதுவும் கூற
வில்லை ; ஏ.கே. நாற்பத்தேழு
அதை வைத்துக் கொண்டு
இராமனுக்குக் காப்பாக நின்று
இருந்தான். அவ்வளவுதான்.

''படைக்கலம் போட்டு விட்டு
அடைக்கலம் என்று வந்து
இருக்கிறான் ; அவனுக்கு
இடம் தந்து ஆதரிப்பது
நம் கடமை,,
இலங்கை அகதிகள்
எத்தனைபேர் வந்தாலும்
எதிர் கொள்வது ஏற்பது
நம் கடமை'' என்றான் இராமன்,

வீடணன் அங்கு
இடம் பிடித்தான்.
அவன் தவறு செய்யாமல்
இருக்க இராமன்
"இராவணனுக்குப் பின்னர்
ஆட்சி அவனுக்கே உரியது"
என்று வேட்கையையும்
ஊட்டினான்; உறுதியும் செய்தான்.
அரசியல் அறிஞன்
அதனால் அவனை அணைத்துச்
சேர்த்துக் கொண்டான்.

## தூது விடுதல்

அங்கதன் வாலியின் மகன்;
அவனை முதலில் தூது
அனுப்புவது என்று பேசி
முடிவு செய்தனர்

அவன் பேச்சுப் போட்டியில்
பரிசுகள் வாங்கியவன்.
அரச மகன் அதனால்
அவனுக்குத் தகுதி இருந்தது.

அனுமனை அனுப்பினால்
அவன் அவசரக்காரன்; ஏதாவது
பேசிச் சிக்கல் விளைவிப்பான்;
சென்றவனே சென்றால்
வேறு ஆள் நிறுத்தி வைக்க
வக்கு இல்லை என்று
எதிர்க்கட்சி பிரச்சாரம் செய்யும்;
புது ஆள் போட்டால்தான்
படமே ஓடும்;
அமோக வெற்றி கிடைக்கும்.

அங்கதன் அரச அவை
அடைந்தான் ; இராவணன்
அவனை மதித்து
இருக்கை தந்து அமரச் செய்தான்.

அவன் வாலியின் மகன் ;
வாலி இவனுக்கு நன்கு
தெரியும் ; இந்தப் பக்கம் வந்தால்
அவன் அங்குத் தங்கிச் செல்வது
உண்டு ; தாராளமனம் ;
அதிக தொந்தரவு வாலி
செய்தது இல்லை.

அங்கதன் தான் வந்த
விஷயத்தை விவரமாகக்
கூறினான் ; "சீதையை
அனுப்பிவை ; அதுதான்
நல்லது ; அறச் செய்கை ;
வீண் வம்பு வேண்டாம்.
இராமன் மாவீரன்;
அவன் அம்புக்கு
நீ வெறும் துரும்பு;
என் தந்தையையும் அவன்
வென்று இருக்கிறான் ; அதனால்
ஆற்றல் மிக்கவன்" என்றான்.

"தந்தையைக் கொன்ற
பகைவனுக்கா நீ
பரிந்து பேசுகிறாய் ?
மானம், ஈனம்,
வெட்கம், சூடு,
சுரணை இந்த இனங்கள்
எதுவுமே உனக்கு

இல்லையா ! உன் சிற்றப்பன் உன்
ஆட்சி பற்றிக் கொண்டான் ;
அந்த ஆட்சியை நான்
பெற்றுத் தருகிறேன் ;
இருந்து உணவு உண்டு செல்க''
என்று விருந்துக்கு அழைத்தான் ;
அவன் திருந்தவில்லை ;
திமிர்ந்த மரமாக நின்றான்.

தூதுவன் என்றும் பாராமல்
அவனைப் பிடித்துக் கட்டச்
சொன்னான் ; அவன் துடித்து
எழுந்து தாவி
வேகமாக மறைந்தான் ;
இராமன்பால் சென்று உரை செப்பினான்.

**முதல் நாட்போர்**

போர் என்றதும் இராவணன்
புறப்படத் தயாரானான் ;
தேர் ஏறித் தெருவுக்கு
வந்து சேர்ந்தான் ; களத்தில்
இராமனை நேரில் சந்தித்தான்.

தேர்வு எழுதச் சென்றான் ;
வினாத் தாளைப் பார்த்தான் ;
விடை தர இயலவில்லை ;
விடைத்தாளை மடித்து
வைத்து வீடு திரும்பினான்.

இராமனிடம் இராவணன்
தோற்றுத் தேரையும்
படைக் கருவியையும் இழந்து

நிராயுதனாக நின்று
செய்வது அறியாது விழித்தான்.

''அடுத்த முறை எழுதலாம்
இன்று போய்ப் பிறகு வா''
என்று தேர்வாளர்
தெரிவித்து அனுப்பினார்.

''இன்று போய்ப் போர்க்கு
நாளைவா'' என்று
கடன் வசூலிக்க
வந்தவர்களைத் திருப்பி
அனுப்புவதைப் போல் இராமன்
அவனை அனுப்பி வைத்தான்.

ஊரிலே இவன் பெரிய
புள்ளி என்று பேர் இருந்தது ;
என்ன செய்வது ? இவன்
கற்றது கை மண்ணளவு ;
தேர்வில் தோல்வி பெற்றான் ;
இராவணன் மனம் ஒடிந்து
வீடு திரும்பினான்.

''இந்தக் காலத்துப் பிள்ளைகள்
மிகவும் சுறுசுறுப்பானவர்கள் ;
திறமை சாலிகள் ; அவர்கள்
முன் நாம் நிற்க முடியாது'
என்பதை உணர்ந்து கொண்டான் ;

இராமனின் வீரத்தை மதித்தான்.
அடிபட்டவனுக்கு ஆறுதல்
தர அவன் பாட்டன் மாலியவான்
அருகிருந்து பேசினான் ;

இராவணனுக்கு ஒரே அவமானம்
ஏற்கனவே சானகி ;
மதிப்பது இல்லை ;இப்பொழுது
எந்த முகத்தைக் கொண்டு
அவளிடம் பேசுவது ?
''வீரம் அற்றவன்'' என்று
அவள் வெறுத்து ஒதுக்குவாள் ;
அதற்காகவே அன்று இரவு
சிவராத்திரி யாக்கினான்

மறு நாள் காலை
அவன் பாட்டன்
மாலியவான் அவனைத்
தேற்றினான்; சிலசாற்றினான்.
''செஞ்சுருட்டிராகப்
பாடகன் சிவதாணு
அவனை அனுப்பி வைத்தால்
அவன் ஜமாய்த்து விடுவான்''
என்று அவன் கூறினான்.

''கும்பகருணனை அனுப்பு ;
அவனுக்குச் சத்தி வேண்டாம் ;
கடப்பாறை வேண்டாம் ;
குத்தியே சாய்த்து விடுவான்''
என்று புத்தி கூறினான்.

**கும்பகருணனை அனுப்புதல்**

தூங்கிக் கிடந்த
முகராசி அவனைத் தட்டி
எழுப்பி அவன் முன் நிறுத்தினர்.

தூக்க மயக்கம்; குடி போதை; உணவு உண்ட.
அயர்ச்சி அவனுக்கு

ஒன்றுமே விளங்க
வில்லை; போர் என்பது
மட்டும் தெரிந்தது.

அவன் மிகவும் நல்லவன்;
''இன்னுமா அந்த சீதை
இங்கே இருக்கிறாள்?
நெருப்பு அவள்;
அவளை இவன்
இருப்பு வைத்திருக்கிறான்.
மடியில் கட்டிக் கொண்டு
அவதிப் படுகிறான்;''
அவளுக்காக இரக்கப்
பட்டான்; உரக்கப்
பேசினான் ; குடித்தான் அவன் ;
போர் அதற்கு ஆள்
தேடுகிறான்; அவதிக்குள்

அகப்பட்டு அல்லல் படுகிறான் ;
நிலைமை அவனுக்கு விளங்கியது ;
பிரச்சனை மிகவும் சிறியது :
''அந்தப் பெண்ணை விட்டு விடு ;
அவள் போய்க் குடித்தனம்
செய்யட்டும் ; அவளை மடக்கி
வைப்பது மடத்தனம்'' என்றான்.

''அறிவு சொல்ல நீ அமைச்சன் அல்ல ;
போ சாப்பிடு ; உறங்கு ;
சாப்பாட்டு ராமன் ;
எதற்கும் உதவாதவன்''
என்று எள்ளி உரைத்தான்.

''தருக என் தேர்ப்படை ;
வருக படைகள் என்னுடன்''

என்று வரித்துக் கட்டிக் கொண்டான்.
எழுந்து புறப்பட்டான்,

கும்பகருணன் அவனைத் தடுத்து
நிறுத்தினான் ; ''இருத்தி நீ''
என்று கூறி அமைதிப்படுத்தினான்.

''அற்றது இனி உன் முகத்தில்
விழித்தல் ; பெற்றனன்
விடை'' என்று கூறிக்
களம் நோக்கிச் சென்றான்.

''அடேயப்பா ! இப்படி
ஒரு மனிதனா ? அளவு மீறியவன்''
என்று இவனைப் பற்றி
இராமன் விமரிசனம் தந்தான் ;
கும்பகருணனை அவன் தம்பி
வீடணன் கண்டான் ;

அவன்பால் இரக்கம் கொண்டான்.
அவனைத் தான் அழைத்து
வருவதாக எதிர்நீச்சல்
செய்து கும்பகருணனை அடைந்தான்.

''அடப்பாவி ! நீ ஏன்
திரும்பி வந்தாய் ?
கொள்ளி போட உன்னைப்
புள்ளியிட்டு வைத்திருந்தோம் ;
நாங்கள் எல்லாம்
சமாதியாகி விட்டால்
சுற்றி வந்து
வருஷத்துக்கு ஒருநாள்

மாலைபோட்டு மரியாதை
செய்ய யார் இருக்கிறார்கள் ?
போ நிற்காதே'' என்றான்.

கும்பகருணனுக்குப்பதவி
தந்து விலைக்கு வாங்க
பேரம் பேசினான்.
''எனக்கு ஆட்சிப் பதவி
அது உறுதி;
இராமன் தந்த வாக்குறுதி;
உனக்கு மாற்றித் தருகிறேன்''
என்று பேச்சு வார்த்தை நடத்தினான்;

''கட்சி மாறும் கொள்கை
எனக்கு இல்லை ; கொள்கைவீரன்;
தலைமை தவறு செய்யலாம்''
தடுத்து நிறுத்த முயன்றேன் ;
பயனில்லை ; அழிகிறேன்
அவனோடு அழியும் அடிமட்டத்
தொண்டன் நான்'' என்றான்.

''கட்சிக் கட்டுப்பாடு
என்று கொள்கை பேசும்
கொள்கைக் காரன்;
ரொட்டித் துண்டுக்கு
அவன் கடமைப் பட்டவன் ;
செஞ்சோற்றுக் கடன் என்று
செந்தமிழில் கூறுகிறான்;
அவனை உடம்பாடு
செய்ய இயலாது'' என்று
இடம் பெயர்ந்து திரும்பி
வந்தான் வீடணன்.

இந்தச் சுக்கீரிவன்
அடிக்கடி துள்ளிக் கொண்டு
தன்னை "மாவீரன்" என்று
மார்தட்டிக் கொண்டு இருந்தான்.
கும்பகருணன் அருகில்
வந்ததும் அவன் மேல்
திடீர் எனப்பாய்ந்தான் ;

குரங்குத் தாவல் அது.
அவன் இவனைச் சுருட்டிப்
பைக்குள் போட்டுக்
கொண்டு நிமிர்ந்து நின்றான்.

இலக்குவனும் அவனோடு
போர் செய்தான் ; குன்று
முட்டிய குருவியாயினான் ;
சுக்கிரீவனை மீட்பது
அவசியம் ஏற்பட்டது;
அம்பு ஒன்று ஏவி
கும்பகருணனின்
நெற்றியில் செலுத்தினான் இராமன்
அந்த இரத்தம் பட்டுச்
சுக்கீரிவனைப் பிரகாசம்
பெறச் செய்தது ; கும்பகருணனின்
மூக்கைக் கடித்துக்
கொண்டு ஓடி வந்து விட்டான்

பிறகு இராமனுக்கும்
கும்பகருணனுக்கும்
கடும் போர் நடந்தது ;
அப்படிச் சொன்னால்தான்
எழுத்துக்கு ஏற்றம் தரும்.
அவன் கைகளையும், கால்களையும்
துண்டித்து வீழ்த்தினான் ;

அவன் வெறும் முண்டமாக
நின்றான் ; அசைவு இழந்தான்.

வீரம் மிக்க அவனைக்
கட்டித் தழுவிப் பாராட்ட
விழைந்தான் ; இரத்தக்கறை
அதனால் சற்று அயர்ந்தான்.
ஆட்டததில் வென்றவர்
தோற்பவர் கைகளைக்
குலுக்கி நட்புப்
பாராட்டுகின்றனர் ;
அது விளையாட்டுப் பண்பாடு ;
ஆட்டம் முடிந்தது
கை குலுக்கத்தலைப்பட்டனர்.

''மூக்கிலாமுகம் என்று
நோக்குவார் ; அவர்கள்
மூக்கறுபட்டவன் என்று
வாக்கினால் இகழ்ந்து
பேசுவர் ; அதனால்
என் உயிரைப் போக்குவாய்''
என்று கேட்டுக் கொண்டான்.

அவன் பருத்த தலையைத்
தனியாக அறுத்து அவனை
அடையாளம் இழக்கச்
செய்தான். அதனைக்
கடலுள் ஆழ்த்தினான்.

**இந்திரசித்துடன் போர்**

இந்திரசித்துவின் தம்பி சற்று
அவசரக்காரன் ; அதிகாயன்

எடுத்து எறிந்து தாக்கி
எதிரிகளை ஓடவைப்பவன் ;
வீண் சண்டைகளை விலைக்குப்பேசி
வம்புகளை வளைத்துப் போடுபவன்;

கும்பகருணன் மறைந்தான் என்ற
செய்தி கருப்பு எழுத்தில் வெளிவந்தது.
கும்பகருணன் மறைந்தான் ;
இனி இராவணன் ஒழிந்தான
இராமன் முன் நிற்க முடியாது''
என்று நடந்து கொண்டிருந்தவர்கள்
எல்லாம் நாலு வார்த்தை பேசினார்கள்.

அதிகாயனால் அடங்கி
இருக்க இயலவில்லை ;
இராவணன் ஆணையை அவன்
கேட்கவில்லை ; அனுபவம்
இல்லாதவன் ; ஆவேசப்பட்டான், எதிர்த்துச்
சுவாசம் விட்டான்.

''பச்சை பாலகன் அவன்
சிகப்பு இரத்தம்
சிதற வைத்து விட்டனர்''
என்று பதறி எழுந்தான்
தமையன் இந்திரசித்து,

மாயப்போர்கள் பல
செய்து எதிரிகளை
மடக்கியவன் இந்திரசித்து ; வயதில்
இளையவன் ; அவனைத் தாக்குவது
தரக்குறைவு என்று இராமன்
இலக்குவனை அனுப்பி
வைத்தான் ; இந்திரசித்து

கயிறுதிரிப்பதில் வல்லவன்;
நாக பாசக்கயிற்றால்
இலக்குவனைக் கட்டிவிட்டான்.

''மோசம் போய்விட்டோம்''
என்று இராமன் அதிர்ந்து விட்டான்.
''இலக்குவன் மூளையில் தாக்கம்;
அதனால் பெருந்தூக்கம்;
கோமா நிலை'' என்று
மருத்துவர் கூறினார்கள்.

உயிர்க் காற்றுக்
கொண்டு வந்து
சுவாசிக்க வைக்க முற்பட்டனர்.
''அவன் உயிர் பெற்று
எழுவது அரிது;
பிழைப்பது உறுதி இல்லை'' என்றனர்;

நாட்டு வயித்தியம் நன்கு
கற்ற கரடி வேந்தன்;
வயது மிக்கவன்; வாதம்
பித்தம் சிலோத்தமம்
இந்த வகைகளை அறிந்தவன்.
''சஞ்சீவி என்னும் மருந்து
மூலிகை கொண்டு வந்தால்
அதனை மூக்கில் வைத்தால்
சிரஞ்சீவி ஆவான்'' என்று
அறிந்தது கூறினான்.

அது ஏம கூடம்
என்னும் மலையில்
மேருவுக்கு அப்பால்
உள்ளது; கொண்டுவந்தால்
பிழைப்பான்'' என்றான்.

''இலை என்ன? செடியே
கொண்டு வருவேன்;
செடி என்ன?
மலையையே கொணர்வேன்''
என்று அனுமன் புறப்பட்டான்.

மலையோடு வந்தான்
என்று சொல்கிறார்கள்;
வேரோடு பெயர்த்து வந்தான்
அதுதான் உண்மை;

இலக்குவன் உயிர் பெற்று
எழுந்தான்; மறுபடியும்
போர் தொடங்கியது.

யாரோ சந்நியாசிகள்
இந்திரசித்துக்குச்
சொல்லி இருந்தார்கள்
''நிகும்பலை கோயிலுக்குச்
சென்றுவழிபட்டால்
நிச்சயம் வெற்றி''
என்று அறிவிக்கப்பட்டது;

படைத்தலைவன்
மகோதரனைக் களத்தில்
நிறுத்தி விட்டு யாகம்
செய்ய நிகும்பலை

கோயில் சென்றான்;
அவன் கோயில் சென்று
அடையும் முன்
வழி மறித்து
இலக்குவன் அவன்
ஆயுளை முடித்தான்.

## இராவணன் நிகழ்த்திய இறுதிப் போர்

தம்பி கும்ப கருணனை
இழந்தான் ;மக்கள் இருவர்
களத்தில் பட்டனர் ;
மண்டோதரி வாய்விட்டு
அழுதாள்; இராவணன்
செயலற்று நின்றான்.

வென்று திரும்பிவருவான்
என்ற உறுதி இல்லை ;
இரண்டில் ஒன்று ;
துணிந்து நின்றான் ;
வென்றால் சீதை ;
தோற்றால் வீரமரணம்.

இராவணன் மாவீரன் ;
மாட்சிமை மிக்கவன் ;
அவன் போதாத காலம் ;

சீதை பேரழகி
அவள் அழகில்
பேதலித்துவிட்டான்.

''இராவணன் கொடியவன் ;
தீயவன் ; பிறர்மனை
விரும்பிய பாதகன்''
என்று எல்லாம்
பேதைகள் பேசினர்.

மேதைகளும் இந்த
விஷயத்தில் எளியவர்
ஆவது இயல்பு ; அது
மனித ரத்தம் ;

சட் டங்கள் கடுமை
மிக்கவை ; ஒழுக்க
வரம்புகள் மதிக்கப்படுபவை ;
அதனால் இராவணன்
நீதி தேவன் முன்
நிற்கும் நிலை ஏற்பட்டு விட்டது.
நீதி வென்றது ;
அநீதி தோற்றது.

**இறுதி அவலம்**

ஒருநாள் அவகாசம்
தரப்பட்டது ; அதற்குள்
அவன் ஓராயிரம்
நினைத்து இருப்பான் ;
அடியெடுத்து வைத்துவிட்டான் ;
வைப்புப் பணம் திரும்பப்
பெறமுடியாது. இரண்டில்
ஒன்று பார்த்து தான்
ஆக வேண்டும்.

முடிவு அவன் பக்கம்
அமையவில்லை ; அவன்
தன்னை முடித்துக் கொண்டான்.
இராமன் அம்பு
அவனுக்கு அமர
வாழ்வைத் தந்து அனுப்பியது.
மானுடம் வென்றது ; இது
கம்பர் கருத்துரை ;
மனித மகனாகவே இறுதிவரை
செயல்பட்டு மாவீரனாக
வாழ்ந்து வெற்றி கண்டான் இராமன்.

## மண்டோதரியின் அவலம்

சாவு என்றால் அழுகை
அதன் தொடர்ச்சி ;
அதுவும் நெருக்கமானவர்கள்
அழுவதே ஒருசோகம் ;
ஒப்பாரி வைப்பது
என்பது சாவின்
ஒரு அங்கம் ;
அதில் பாட்டும்
எழுவது உண்டு ;
இவள் என்ன
சொல்லி அழுதாள் ?
''சீதையின் நினைவு
அவன் இதயத்தில்
உள் இருக்கும்

என்று தடவியதோ
ஒருவன் அம்பு''
ஆறறாது சோர்ந்தாள்.

## இறுதிச் சுற்று

மீட்கப்பட்ட சீதை
இராமனிடம் சேர்க்கப்பட்டாள் ;
திடீர் என்று அவனுக்கு ஓர்
ஐயம் வந்ததாம் ; பட்டிமன்ற
விவாதம் எழுப்பினான்.
சீதையின் கற்பைப் பற்றி அவன்
ஒரு விவாதம் நடத்தினான் ;
செல்வம் மிக்க நகர் ;
வலிமை மிக்க ஆட்சி ;
தட்டிக் கேட்க ஆள் இல்லை ;
இவள் வேறு பட்டினி ;
தவறாமல் இருப்பாளா ?
நியாயமான தலைப்புதான்
இது பட்டி மன்றத்துக்கு
ஏற்ற தலைப்பு ; நா தடிக்கப்
பேச ஒரு வாய்ப்பு ;
இராமன் மாவீரன்;
உத்தமன் ; அவன்
நினைவில் இது உதயம்
ஆகியது என்றால்
ஏற்றுக் கொள்ள இயலாது ;

அது இராமனுக்கு இழுக்கு ;
சீதை அதற்கு பதில் சொல்லத்
தீக்குளித்தால் என்றால்
அந்தச் சொல் இலக்கியத்துக்கே வழுக்கு.
நிச்சயம் இந்தத் தேர்வுக்கு
அவள் சம்மதித்து இருக்க
மாட்டாள் ; இது வீண் கற்பனை.
சீதையை இராமன் தீக்குளிக்கச்
சொல்லவும் இல்லை ; அவள்
நெருப்பில் விழுந்து
எழவும் இல்லை ;
இது சுத்த அபத்தம் ;
தூயவளாயினும் நெருப்பு
சும்மாவிடாது; அது
எரித்து விட்டிருக்கும்.
இது கதையின் கூட்டல் ;
அதைக் கழித்தல் ஆக்குவதே தக்கது;
அப்பொழுதுதான் கணக்கு சரிப்பட்டு வரும்.

**நாடு திரும்புதல்**

ஆண்டுகள் பதின்நான்கு முடிந்தன;
முடியும் நிலை; அதற்குள்
பரதன் அவசரப்பட்டு விட்டான்;
திடீர் திருப்பம், நெருப்பு
மூட்டி அதை ஒரு விழா ஆக்கினான்;

தீக்குளித்தல் என்பது
இந்த நாட்டுத் தீய பழக்கம்;
அடுக்கி வைத்த சிதையில்
படுக்க வைப்பர்; இதனை
உடன் கட்டை ஏறுதல் என்பர்.
மாமியின் கொடுமைக்கு அந்த
வீட்டு மருமகள் மண்ணெண்ணெயை
விரயமாக்குவது இன்றைய பத்திரிகைச் செய்தி.
அரசியல் காரணங்களுக்குத்
தொண்டர்கள் தீக்குளிப்பது.
இப்படி இந்தத் தவறான
கலாச்சாரம் பரதனையும் பற்றியது.
இராமனுக்குச் செய்தி எட்டியது ;
அவசரத் தந்தியாக
அனுமன் வந்தான் ;
தலைவர் வந்ததும்
பழச்சாறு பருகத் தந்தார் ;
உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.
பினாமி ஆட்சியை
உரியவரிடம் சேர்த்தான் ;
நந்தியம் கிராமத்தை விட்டு
அனைவரும் நகர்ந்தனர் ;
இராமன் முடிசூடி
நாட்டுக்கு உயர்வு தந்தான்.
அயோத்தி இந்துக்களின்
புண்ணிய க்ஷேத்திரம் ;
அது இன்று அரசியலுக்குப்
பாத்திரமும் ஆகி உள்ளது.